15-3-54

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை



THE REGISTRAR OF NEWSPAPERS
MAY 1954

# கேட்டீர்களா!

## பேசும் கடிதங்கள்

பிலடெல்பியா (ஐக்கிய அமெரிக்கா)வில் ராபர்ட்ஸ் என்பவர் ஓ அதிசயக் கருவியைக் கண்டு பிடித்திருக்கிறார். காந்த ஏட்டில் இந்தக் கருவி நாம் சொல்லுகிற செய்திகளைப் பதிவு செய்கிறது. அந்த ஏட்டை நாம் அனுப்ப வேண்டியவருக்கு அனுப்பலாம். அதை அவர் படித்துப் பார்ப்பதற்குப் பதிலாக மற்றோர் எந்திரத்தில் பொருத்தினால் ஏட்டில் பதிவான செய்தியைக் கேட்க முடியும். ஒருவர் எழுதியிருப்பதைப் படிப்பதற்குப் பதில் அவருடைய குரலையே கேட்க இந்தக் கருவி வசதியளிக்கிறது.

## கரடி வேட்டை

பண்டித நேரு 37 வருஷங்களுக்கு முன்பு வேட்டையாடப் போவதுண்டாம். அதற்குப் பிறகு வேட்டையாடுவதையே விட்டு விட்டாராம். கடைசியாக அவர் ஒரு கரடியை வேட்டையாடி கொன்றாராம். அதை நினைத்தாலே அருவருப்பாக இருக்கிறது என்று அவர் கூறினார்.

## வலதுபுறத்தில் இருதயம்

எல்லாருக்கும் இடது புறத்தில் இருதயம் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் ஏழுவயதுச் சிறுமி ஒருத்திக்கு வலது புறத்தில் இருதயம் இருக்கிறதாம். இந்தப் பெண் இதாலி தேசத்தைச் சேர்ந்தவள். இவளுக்கு வைத்தியம் செய்ய நேர்ந்த டாக்டர் இதைக் கண்டு பிடித்தார் இதனால் இவளுக்குக் கொஞ்சமும் கஷ்டமாக இல்லையாம். பெரிய பெரிய டாக்டர்களுக்கு எல்லாம்கூட இது ஒரு பெரிய புதிராக இருக்கிறதாம்

## பயங்கர நாடகங்கள்

"கொலை, சித்திரவதை முதலிய காட்சிகள் நிறைந்த நாடகங்களைக் குழந்தைகள் பார்ப்பது நல்லதல்ல; குழந்தைகள் மனம் இதனால் வெகுதூரம் வேதனையுறுவதோடு, மிருக சுபாவமும் அவர்களிடம் தலைதூக்கத் தொடங்கிவிடுறது" என்று நமது முதல் அமைச்சர் சமீபத்தில் ஒரு பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

## கைத்தறி நெசவாளர்

நம் சென்னை ராஜ்யத்தில் கைத்தறி நெசவை நம்பி வாழ்பவர்கள் $22\frac{1}{2}$ லட்சம் பேர் இருக்கிறார்களாம். சுமார் $5\frac{1}{2}$ லட்சம் கைத்தறிகள் இருக்கின்றனவாம்.

## நேரு தலைமையில் கிரிக்கெட் கோஷ்டி

பண்டித நேரு ஏப்ரல் மாதக் கடைசியில் இலங்கை செல்கிறார். ஆசியப் பிரதமர்கள் மகா நாட்டில் அவர் அங்கே கலந்து கொள்வார். அப்போது இந்தியப் பார்லிமெண்ட் மெம்பர்கள் கொண்ட கிரிக்கெட் கோஷ்டி ஒன்று நேருவின் தலைமையில் விஜயம் செய்யப்போகிறதாம்.

# கண்ணன்

## பொருளடக்கம்


மலர்: 5 இதழ்: 6

15 - 3 - '54



| | | |
|---|---|---|
| குழந்தைகளே ! | பக்கம் .. | 2 |
| சந்திரகிரிக் கோட்டை | .. | 3 |
| மாஸ்டர் பாலகுமார் | .. | 9 |
| பைஜாமாவின் ஆசை | .. | 11 |
| உருவத்தின் பரிசு | .. | 13 |
| நல்ல ஞாபகம் | .. | 17 |
| மூன்று வரங்கள் | .. | 18 |
| நாய் வால் | .. | 22 |
| கைக்கு எட்டியது | .. | 26 |
| கண்ணன் கழக அங்கத்தினர்கள் | | 27 |
| சரியான தீர்ப்பு | .. | 29 |
| அசட்டுப் பிச்சு | .. | 33 |
| எங்கள் பகுதி | .. | 38 |
| கேட்டீர்களா! - இரண்டாவது அட்டை | | |
| கிளைக் கழகங்கள் - மூன்றாவது அட்டை | | |



வருஷ சந்தா ரூ. 3/-
கலைமகள், கண்ணன், மஞ்சரி
மூன்றும் சேர்ந்த
குடும்பச் சந்தா ரூ. 12/-


கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## சிரிப்பு

211789

கிழக்கு வங்காளத்திலிருந்து சரத் என்று ஒரு பையன் வந்தான். அவன் ஓர் அகதி. தாய் தந்தையர் அற்றவன். அவனை ஒரு வங்காளி ஆதரவுடன் எடுத்து வளர்த்து வந்தார். அவனுக்கு ஐந்து வயதுதான் இருக்கும். குறுகுறுவென்று பார்க்க மிகவும் லட்சணமாக இருப்பான். அவன் இருந்த வீட்டுக்கு அடுத்த வீட்டில் பாமினி என்ற பெண் இருந்தாள். அவளுக்கும் ஐந்து வயதுதான் ஆயிற்று. அவள் ஏதோ தமிழில் பேசுவாள். அவன் ஏதோ வங்காளியில் பேசுவான். ஒருவர் பாஷை மற்றவருக்குப் புரியாது. இரண்டு பேருக்கும் எப்படியோ சிநேகம் ஏற்பட்டுவிட்டது.

REGISTRAR OF BOOKS
MAY 1954

இதைக் கவனித்தார் பாமினியின் மாமா. அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு நாள் பாமினியை அவர் அழைத்தார். நிறையத் தின்பண்டங்களை அவள் கையில் கொடுத்தார். "பாமினிக் கண்ணு, சரத்தும் நீயும் சிநேகமாகி எப்போதும் விளையாடுகிறீர்களே— எப்படி? நீ பேசும் பாஷை அவனுக்குப் புரியாதே. அவன் பேசுவதும் உனக்குப் புரியாதே. எப்படிச் சிநேகமாக இருக்கிறீர்கள்? எப்படிப் புரிந்து கொள்கிறீர்கள்?" என்றார்.

"இல்லே மாமா, பேசற பாஷை புரியாதுதான். ஆனா நாங்க ரெண்டு பேரும் சிரிக்கிறது ஒரே பாஷைதான்! அது போதுமே!" என்றாள் பாமினி.

இதைக் கேட்டு மாமாவும் அவர்கள் பாஷையிலேயே சிரிக்கத்தான் வேண்டியிருந்தது.

—மஞ்சரி.

# குழந்தைகளே!

உங்கள் கடிதங்களால் இப்போது என் மேஜை இருக்கும் இடமே தெரியவில்லை. கடிதங்கள் அப்படி மலை மலையாகக் குவிந்திருக்கின்றன.

புதிய தொடர்கதையை நீங்கள் எல்லோரும் ஒரு முகமாக ரஸிப்பதை அறிந்து சந்தோஷப்படுகிறேன். சரித்திரக் கதையாயிற்றே, பழங்காலக் கதை என்று அலட்சியமாக எண்ணுவீர்களோ என்று பயந்துகொண்டேயிருந்தேன். ஆனால் உங்களுடைய உண்மையான தமிழ் ஆர்வமும் கதா ரஸனையும் இப்போதுதான் நன்ருகப் புலனுகின்றன. 'எங்கள் பகுதி'யைப் படிக்கும் பிறருக்கும் இப்போது அவை தெளிவாகப் புலனுகும் என்றும் நம்புகிறேன். இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு இதுதான் தேவை, இதுதான் பிடிக்கும் என்று கண்ணை மூடிக்கொண்டு சொல்வதையெல்லாம் உங்கள் கடிதங்கள் பொய்யாக்கிவிட்டன. நல்ல தமிழில், நல்ல முறையில் பிரசுரமாகும் எந்தச் சுவாரஸ்யமான கதையும் உங்கள் அபிமானத்தைப் பெற்றுவிடும் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்? எந்தக் காலத்துக் கதையாக இருந்தாலும் அதில் கற்பனை அழகும் சுவாரஸ்யமும் இருக்கவேண்டும்; ஓட்டம் இருக்கவேண்டும்; எளிய இனிய தமிழில் அதைச் சொல்லவேண்டும்; சொல்லும் முறையில் புதுமை இருக்கவேண்டும் என்பவற்றைத்தான் உங்கள் கடிதங்கள் தெரிவிக்கின்றன. எந்தச் சிறு விஷயத்தையும் மறைக்காமல் பட்டவர்த்தனமாக நிறைந்த மனசுடன் பாராட்டக் கூடியவர்கள் குழந்தைகள்தான் என்பதை நீங்கள் நிருபித்துவிட்டீர்கள். புதிய தொடர்கதையைப் பாராட்டி எழுதியிருக்கும் உங்கள் அனைவருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த இதழிலிருந்து இந்தப் பகுதியை இன்னும் கொஞ்சம் விரிவாக வெளியிட நாங்கள் முடிவு செய்திருக்கிருேம். இன்னும் பலருடைய கடிதங்களும் அதிக அளவில் இடம் பெறும் அல்லவா? 1-3.54 இதழ் பற்றிய விமரிசனம் 'எங்கள் பகுதி'யில் எழுதவேண்டும். 22-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி எழுதிவிடுங்கள்.

அடுத்ததற்கு அடுத்த இதழ் தமிழ் வருஷப் பிறப்பன்று வருகிறது. அதில் மேலும் ஒரு புதிய பகுதி ஆரம்பமாகப் போவதை இப்போதே தெரிவித்துவிடுகிறேன். அடுத்த இதழில் அதன் விவரங்களைத் தெரிவிக்கிறேன். ஒரு புதிய பரிசுப் போட்டியும் புது வருஷ ஆரம்பத்தில் வெளியிடப்படும். அசட்டுப் பிச்சு புது வருஷ ஆரம்பத்தில் உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளப் போகிருன். அவனைப் பிரிவது உங்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். இருந்தாலும் என்ன செய்வது? ஒரு வருஷத்துக்கு மேலாக அவன் அட்டகாசம் செய்துவிட்டானே! போதாதா?

பொதுவாகப் புது வருஷத்தில் கண்ணன் பல மாறுதல்களுடன், நீங்கள் அனைவரும், 'சபாஷ்! பிரமாதம்!' என்று கொண்டாடக்கூடிய முறையில் வெளிவருவான். உங்களுடைய விருப்பங்களையெல்லாம் தான் எங்கள் பகுதியில் எழுதி வருகிறீர்களே! அவற்றைச் செய்து உங்கள் அபிமானத்தைக் கவர்வதைவிட, கண்ணனுக்கு வேறு என்ன வேலை?

—ஆசிரியர்.



# சந்திரகிரிக் கோட்டை

'ஜனு'

## 10

அந்தக் குகையின் வாய் மிகப் பெரிதாக இருந்தது. இயற்கையாகவே அமைந்திருந்த இத்தனை நீண்ட குகையை அந்தச் சகோதரர்கள் இதற்குமுன் கண்டதில்லை. அவர்கள் நின்ற இடத்துக்கு மேலே ஒரு பெரிய வில்லும் அம்புகள் நிறைந்த அம்பறாத் தூணியும் மாட்டப்பட்டிருந்தன.

வெகு தூரத்தில் முரடனும் இளம் சிறுவனும் மிகப் பழங்காலத்துக் கத்தி போன்ற இரும்பு ஆயுதம் ஒவ்வொன்றை வைத்துக் கொண்டு சண்டையிட்டார்கள். அந்தச் சிறுவனே வெகு சாமர்த்தியமாக அந்த முரடனுக்குப் பிடியே கொடுக்காமல் சமாளித்துக் கொண்டிருந்தான். இதென்ன விளையாட்டுச் சண்டையா வினையான சண்டையா என்பது அவர்களுக்குப் புரியவில்லை.

அமலனும் விமலனும் இன்னமும் பழைய மாதிரி அன்புடன் பேச்சுக் கொடுக்கவே கூச்சப்பட்டார்கள்.

“நாம் இங்கே வந்து மாட்டிக் கொண்டோமே, நம்முடைய குதிரைகள் என்ன ஆயினவோ!” என்றான் பெரியவன்.

“எல்லாம் உன்னால் வந்தது தானே? பொழுது சாய்வதற்குள் நாம் எப்படிப் புலிக்கோட்டைக்குப் போய்ச் சேருவது? குதிரைகளை எப்படிப் போய்ப் பிடித்து வருவது?” என்றான் சின்னவன்.

“அவ்வளவு முன்யோசனை செய்பவன் ஏன் என் பின்னால் வந்தாய்? வேண்டாம் என்று மறுத்துவிடுவதுதானே?” என்றான் அமலன். இந்தப் பேச்சு மேலே வளர்வதற்குள் முரடன் சிறுவனுடைய இடது கையை லாவிப் பிடித்துவிட்டான். வலது கையில் இருந்த ஆயுதத்தை வேகமாகக் கீழே தட்டிவிட்டான். சிறுவனின் தலைக்குக் குறி வைத்து முரடனுடைய கத்தி மேலே உயர்ந்தது.

அமலன் இதைப் பார்த்துவிட்டான். அவனறியாமல் அவன் கை வில்லை எட்டி எடுத்தது. அம்பறாத் தூணியிலிருந்து அம்பு ஒன்றை உருவி மற்றொரு கை தொடுத்தது.

விர்ரென்று வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு சிறுவனுக்கும்

முரடனுக்கும் இடையே பாய்ந்து முளையடித்ததுபோல் நின்றது. அந்த முரடன் சிறிது விலகிக் கொள்ளாமல் மட்டும் இருந்திருந்தால் அவன் மார்பையே அந்த அம்புதுளைத்திருக்கும்.

முரடன் உடனே குகையைத் திரும்பிப் பாரத்தான். சிறுவனும் பார்த்தான். அந்தச் சமயம் பார்த்துச்சிறுவனை ஆட்டுக்குட்டியைத் தூக்குவது போல் தூக்கித்தோளில் போட்டுக்கொண்டு குகை வாயிலைநோக்கி வந்தான்.

சகோதரர்கள் இருவரும்பாறையோடுபாறையாக ஒண்டிக்கொண்டு நின்றார்கள். எந்தச் சமயத்தில் என்ன நேருமோ என்ற எச்சரிக்கையுடன் ஒரு கைவாளின் மேலேயே

இருந்தது.

முரடன் அருகில் நெருங்க நெருங்க, பார்க்கப் பயங்கரமாக இருந்தான். புலியின் கண்களைப் போல அவனுடைய கண்கள் மஞ்



சன் மசேரென்று தெரிந்தன. உதிர்ந்து போன தடைப்பம் மாதிரி மீசை ஒழுங்கின்றி, குத்துவதுபோல் இருந்தது. கிழட்டுப் புலி ஒன்று நுழைவதுபோல அவன் குகையினுள்ளே வந்தான். நல்ல வெயிலிலிருந்து வந்து இருளைப் பார்த்தால் எப்படி இருக்கும்? பாறையோடு ஒண்டிக் கொண்டு நின்ற சகோதரர்களை அவன் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. குகைவாயிலில் நின்று அந்தப் பெரிய பள்ளத்தாக்கையும் தூரத்தில் புகைபோல் தெரிந்த மலைச் சிகரங்களையும் கோட்டைகளையும் பார்த்தான். பிறகு மதயானை மூச்சு விடுவது போல மூச்சு விட்டுக்கொண்டு குகைக்குள் நுழைந்து சென்றான்.

அவன் தோள்மீது கிடந்த சிறுவன் பார்வைக்கு இளங்கன்றுபோல இருந்தான். அவனுடைய தோலாடையும் கத்தரித்து விடப்பட்ட முன் மயிரும் புது மாதிரியாக இருந்தன. அவன் அந்தச் சகோதரர்களைப் பார்த்து விட்டான் என்றே தோன்றியது. வெளிச்சத்தில் எல்லாம் கண்களை மூடிக்கொண்டே வந்திருந்தான் அவன். குகைக்குள் நுழைந்த பிறகே அவன் கண்களைத் திறந்து பார்த்தான். அதனால் அவனால் இருளிலும் அவர்களைக் கண்டு கொள்ள முடிந்தது. அவன் ஒரு கண்ணைச் சிமிட்டிக் கொண்டே ஒரு கையால் அவர்களை அங்கேயே இருக்கும்படி ஜாடை காட்டிவிட்டுப் போனான். முரடனோ இதொன்றையும் கவனிக்கவேயில்லை. அவன் வேறு ஏதோ முடிவுக்கு வந்தவன்போல வேகமாய்க் குகையின் இருளுக்குள் மறைந்து போனான்.



## 11

இரட்டையர்கள் இருவரும் குகையை விட்டு வெளியே வந்தார்கள். வெயிலோ கண்ணைப் பொசுக்கிற்று. வெகு தூரத்தில் ஒரு மரம் இருப்பது தெரிந்தது. அதைத் தவிர அருகாமையில் நிழலையே காணவில்லை. ஒதுங்கி ஒண்டக் கூட முடியாமல் பாறையின் உஷ்ணம் உடலைக் கொளுத்தியது. நெல் விழுந்தால் பொரிந்து விடும் ஜ்வாலை வீசியது.

பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காய் முடிந்த கதையாக, குகைக்குள் நுழையப் போய். இருக்கும் இடம் புரியாமல், நிற்க இடமில்லாமல் பசிநேரத்தில் தவிக்க நேர்ந்ததே என்று அவர்கள் மனம் வேதனைப்பட்டது. இந்த வேதனை போதாதென்று ஒருவன்மீது ஒருவனுக்கு மனசுக்குள் இருக்கும் குமைச்சல் வேறு



**தமிழ் வாத்தியார்: ஏய், தமிழ் நாட்டு மூவேந்தர்கள் யார் யார் ராமு?**

**ராமு: பாண்டியன், சேரன்... ன்..ன்...**

**த. வா: ஏண்டா சோழனே! படிக்காமெ வந்தே?**

**ராமு: சோழன், ஸார்!**

**—வைத்தீஸ்வரன், மயிலாப்பூர்.**

---

சேர்ந்துகொண்டிருந்தது.

"அந்தப் பையன்தான் ஜாடை காட்டினனே, அதன்படி குகைக் குள்ளேயே இருப்போமா?" என்று விமலன் பேச்சை எடுத்தான்.

"வேண்டாம். இங்கே இருப்பது ஆபத்தில் வந்து முடிந்தாலும் முடியலாம். அதோ தெரியும் கோட்டை ஐந்து கல் தூரத்தில் இருக்கும் போலிருக்கிறது. குதிரைகள் இல்லாவிட்டாலும் மோசமில்லை. நாம் நடந்தாவது போய்விடலாம். அங்கே குதிரைகள் ஏதாவது கிடைத்தால் பார்த்துக் கொள்ளலாம்" என்றான் அமலன்.

அதன்படியே இருவரும் ஒரு விதமாக முடிவு செய்துகொண்டு ஓட்டமும் பெரு நடையுமாகப் பள்ளத்தாக்கில் இறங்கிச் செல்லத் தொடங்கினார்கள். அரை நாழிகை நேரம் இவ்விதம் அவர்கள் இரைக்க இரைக்க, தூரத்தில் தெரிந்த அந்தப் பெரிய ஆல மரத்தை நோக்கிச் சென்றார்கள். போகப் போக வழி மாளவே இல்லை. கால்கள் தள்ளாடின.

மேலும் அரை நாழிகை நேரம் சென்றது. எப்படியோ மரத்தை அடைந்துவிட்டார்கள். இருவரும் களைப்புத் தாங்காமல் ஆலமரத்தில் நிழலில் போய்த் தொப்பென்று சுருண்டு விழுந்தார்கள். என்னதான் இளம் முறுக்கு என்றாலும் அவர்கள் சொகுஸாக ராஜ போகத்தில் வாழ்ந்தவர்கள் அல்லவா? வெயிலின் தாபமும் பசியின் மயக்கமும், மனக் கவலையும் ஒரேமுட்டாகத் தாக்கினால் எப்படிப்பட்டவர்கள் ஆனால்தான் என்ன? மனித சரீரம்தானே?

அவர்களுடைய முகமெல்லாம் கன்றிவிட்டது. அப்படியே சுருண்டு விழுந்தவர்களுக்குச் சோகமும் போட்டுவிட்டது.

எத்தனை நேரம் இந்த நிலையில் இருந்தார்களோ! சூரியன் மேல் வாயில் மறையும் சமயத்தில் முகத்தில் குளிர்ந்த நீர் பட்டதை உணர்ந்து அவர்கள் கண் விழித்துப் பார்த்தார்கள். அவர்களுக்கு அருகே இளங்கன்று போன்ற அந்தச் சிறுவன் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். எதிரே அவர்களுடைய பஞ்சகல்யாணியும் நீலவேணியும் புல் தரையில் மேய்ந்துகொண்டிருந்தன.

"சொன்னதைக் கேட்காமல் வந்து இப்படிச் சோகம் போட்டு விழுந்துவிட்டீர்களே!" என்றான் அந்தச் சிறுவன்.

அமலனும் விமலனும் எழுந்து உட்கார்ந்துகொண்டு கண்களைக் கசக்கிக் கொண்டார்கள்.

"இதோ, கொஞ்சம் கிழங்கு! சாப்பிடுங்கள்!" என்றான் சிறுவன்.

மூவரும் அந்தப் பச்சைக் கிழங்குகளைக் கடித்துத் தின்றார்கள். இரட்டையர்களுக்கு அந்தக் கிழங்குகள் அமிர்தம் போலவே இருந்தன.

"உனக்கு எந்தவிதத்தில் நாங்கள் கைம்மாறு செய்யப் போகிறோம்?" என்று ஆரம்பித்தான் அமலன்.

"உன் பெயர்? வரலாறு?" என்று மெதுவாகத் தொடங்கினான் விமலன்.

அந்தப் பையன் அந்தப் பிரதேசமே எதிரொலிக்கும்படி நகைத்தான். "என் பெயரா? அது உங்களுக்கு ரொம்ப வேடிக்கையாக இருக்கும். என் பெயர் புலிக்குட்டி!" என்றான்.

அவன் வேடிக்கை செய்கிறானே என்று சகோதரர்கள் முதலில் எண்ணினார்கள். உண்மையில் அது தான் அவனுடைய பெயர் என்பதைப் பிறகு தெரிந்துகொண்டார்கள். சற்று நேரத்துக்குள் அவன் அவர்களோடு வெகு நாள் பழகியவன் போலக் கலகலப்பாகப் பேசத் தொடங்கவே அமலன் அவனுடன், "அந்த முரடன் யார்? இந்தக் குதிரைகள் எப்படி இங்கு வந்தன? கொஞ்சம் விவரமாகத்தான் சொல்லேன்!" என்றான்.

அந்தப் பையன் இதற்கும் பெரிதாகச் சிரித்துவிட்டு, "அதெல்லாம் உங்களுக்கு இப்போது எதற்கு? இவை உங்கள் குதிரைகள்தானே? இருள் வருவதற்குள் நீங்கள் புறப்படுங்கள். நான் உங்களைப் புலிக்கோட்டையில் பின்னால் அவசியம் நேரும்போது சந்திக்கிறேன்" என்றான்.

"புலிக்குட்டி! நாங்கள் அங்கேதான் போகிறோம் என்று உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றான் விமலன் ஆச்சரியத்துடன்.

புலிக்குட்டி இவன் பேச்சைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. வேகமாக மரத்தின்மீது ஏறினான். உயர்ந்த கிளை ஒன்றில் நின்றுகொண்டு வாயை ஒரு கையால் மறைத்துக்கொண்டு, "ஹோ-ஹ்-ஹோ!" என்று தன் பலம் கொண்டமட்டும் கத்தி யாருக்கோ குரல் கொடுத்தான்.

அப்படி இரண்டு மூன்று தடவை சத்தம் போட்ட பிறகு மலைக் குகைப் பக்கத்திலிருந்து பதிலுக்கு ஒரு குரல் கேட்டது.

புலிக்குட்டி பிறகு கீழே இறங்கினான். "ஒன்றும் என்னை இப்போது கேட்காதீர்கள்! உங்கள் இருவரில் யாராவது ஒருவருக்கு என் உதவி தேவையாக இருக்கலாம். அப்படி என் உதவி வேண்டும்போது இந்த மரத்துக்கு வந்து குரல் கொடுத்தால் போதும். நான் வந்துவிடுவேன்!" என்று அவர்களுக்கு விடையளித்தான்.

## 12

சகோதரர்கள் இருவரும் தம் தம் குதிரைமீது ஏறிக்கொண்டார்கள். அவர்களுக்கு அந்தச் சிறுவனுடைய நடத்தை மிகவும் விசித்திரமாக இருந்தது. கோட்டை தெரிந்த திக்கையே குறிப்பாகக் கொண்டு குதிரைகள் மீண்டும்

வேகமாகச் சென்றன. நன்றாக இருட்டி ஒரு ஜாமம் ஆன சமயத்தில்தான் அவர்கள் கோட்டை வாயிலை நெருங்கினார்கள்.

கோட்டை வாயிலுக்கு அருகே பெரிய தோப்பு மாதிரி ஓர் இடம் இருந்தது. நடுவில் தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன. எதிரே வட்டமாக ஐந்தாறு பேர் உட்கார்ந்து பேசிக்கொண் டிருந்தார்கள். அந்த இடத்தை அடைந்ததும் குதிரைகள் நின்றன. ஓர் ஆள் பணிவுடன் ஓடி வந்து, "புலிக்கோட்டை பாளையக்காரர் உங்கள் வரவுக்காகக் காத்திருக்கிறார்! இதுதான் காளிகோயில்" என்றான் எதிரே ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டி.

அமலனும் விமலனும் குதிரையை விட்டுக் கீழே இறங்கி அந்த ஆளிடம் குதிரைகளை விட்டுவிட்டுக் கோயிலை நோக்கிச் சென்றார்கள்.

"வரவேண்டும் வரவேண்டும்!" என்று பூத மீசையுடன் இருந்த ஒருவர் காளி கோயில் மண்டபத்திலிருந்து எழுந்து வந்து வரவேற்றார்.

காளி கோயில் வாசலிலே இருந்த திரிசூலம் பளிச்சுப் பளிச்சென்று அந்தத் தீவட்டி வெளிச்சத்தில் மின்னியது.

ஆச்சரியம் என்னவென்றால் ஆலமரத்தடியில் விடை கொடுத்து அனுப்பிய சிறுவன் ஒன்றுமே தெரியாதவன் மாதிரி அந்தப் பாளையக்காரர் பக்கத்தில் நின்று கொண்டிருந்ததுதான்.

அமலனும் விமலனும் அப்படியே சிறிது நேரம் திகைத்துப் போய் நின்றார்கள். (தொடரும்)

---



## ஓய்ந்த வேளையில்..

டி.வி. ரங்கசாமி

மேலேயுள்ள படத்தில் இடம் வலமாக முதல் வரிசையைக் கவனி. முதல் படத்திலுள்ள முதல் எழுத்து, இரண்டாவது படத்தின் இரண்டாவது எழுத்து, மூன்றாவது படத்தின் மூன்றாவது எழுத்து, நான்காவது படத்தின் நான்காவது எழுத்து ஆகியவற்றைச் சேர்த்துப் பார்த்தால் விடை வரும்.

விடை:

இந்தியா, பரதன், காந்திஜி, கண்ணன், தமிழர்.


பாலகுமார்
கதை: ஆர்வி. சித்திரம்: ஸாமி.
முத்து, உன் அப்பாவைப் பற்றிப் பேசினால் உன் அம்மா அழுவானேன்?
அது தான் எனக்கே இன்னும் புரியவில்லை.
நீ மெதுவாக என் அம்மாவிடம் பேச்சை எடு! உன்னிடம் சொல்ல மறுக்கமாட்டா
குழந்தைகளே! சாப்பிட வாருங்கள்!
நீ கேட்பது எனக்குத் தெரியும். அது பெரிய கதை!
மாமி! நான் ஒன்று கேட்பேன். கோபிக்காமல் சொல்வீங்களா?
சாப்பிட்டு விட்டு வாருங்கள் சொல்கிறேன்.
பரவாயில்லை. நீ இப்போது சொல் அம்மா!
பத்து வருஷங்களுக்கு முன்னால்...
நானும் முத்துவின் அப்பாவும் பட்டணத்தில் ஒரு வீட்டில் வேலை செய்தோம். அந்த வீட்டு எஜமானி ஒன்பது மாதப் பிள்ளைத்தாச்சி. அப்போது எனக்கும் முத்து வயிற்றில் இருந்தான்......
ஒரு நாள் எங்கள் வீட்டு எஜமானும் எஜமானி அம்மாளும்.......
நான் பிரசவத்துக்கு ஊருக்குப் போகிறேன்...
கூடாது. உன் அப்பா என்னை அவமதித்ததை நீ மறந்து விட்டாயா?
தனியாக நாம் இங்கு என்ன செய்வது? முதல் பிரசவம் ஆயிற்றே!
அதென்னமோ! போனால் என்ன மறந்து விடவேண்டியது தான்!
எஜமான் ஏதோ காரியமாக வெளியூர் போய் விட்டார். மறுநாள் எஜமானி அம்மாவுக்கு உடம்பு கொஞ்சம் சரியில்லாமல் இருந்தாள்.
நான் என்னடி செய்வேன், கமலம்?
என் வீட்டுக்காரரை விட்டு உங்களை ஊரிலே கொண்டுவிடச் சொல்றேன் அம்மா.
எஜமான் கோபிச்சுக் கிட்டால் என்ன செய்வது?
எஜமான் கோபம் அப்புறம் சரியாயிடும் நீங்க கொண்டு போய் விடுங்க!
கமலம்! நான் போயிட்டு வரேன். ஐயா வந்தால் சொல். ஜாக்கிரதையாய் வீட்டை பார்த்துக் கொண்டிரு!
நீங்க நல்லபடியாப் போயிட்டு ஆம்பிளைப் புள்ளையாப் பெத்துக் கிட்டு வாங்க!
அப்புறம் இரண்டு நாள் கழித்து...
கமலம்! அம்மா எங்கே?
உடம்பு அதிகமாயிட்டுது. ஊருக்கு இப்பதான் போயிருக்காங்க!
என் பேச்சை மீறி ஏன் அவள் போனாள்?
அம்மா மாட்டேன்னு தான் சொன்னாங்க ஆனா அவுங்களைப் பார்த்து நாங்க பயந்து போனோம்!
எஜமான் பிறகு சாப்பிடவில்லை. என் சம்பளத்தைக் கொடுத்தார். வீட்டைக் காலி செய்தார். எங்கே போகிறேன் என்று சொல்லவில்லை. அன்று போனவர்தான்!


அப்போ அப்பா திரும்பல்லியா?
எஜமானி என்ன ஆனுள்?
அப்போ நீ எங்கே போயிருந்தே?
உங்க அப்பா திரும்பி வரத் துக்குள்ளே இவ்வளவும் நடந்துட் டுது.
போதாத காலம் வந்தா எல்லாம் சேர்ந்து வருமே!
அவசரப்படறியே! நீ இப்படி அவசரப்பட்டுப் பிறந்தத ஓல் தானே நான் கோஷா ஆஸ்பத்திரிக்குப் போகும்படி ஆச்சு!
அப்புறம் இவ அப்பாவையும் நான் பாக்கல. எஜமானி அம்மா இரண்டு மாசம் கழிச்சு புள்ளேயோட வந்தாங்களாம். அவங்க வந்த ரெயில் விபத்தில நொறுங்கிப் போச்சு!!
ஐயையோ!!!
நான் முத்துவை எடுத்துக் கொண்டு இந்தக் காட்டு ஊருக்கு வந்துட்டேன். எங்க அப்பா இங்கேதான் இருந்தார். அப்புறம்தான் செத்துப் போனார். நான் அப்பாவை எஜமானியம்மா ஊரிலே போய் விசாரிக்கச் சொன்னேன். அப்போதான் விபத்து நடந் த சேதி தெரிந்தது.
எஜமானி என்ன ஆனு னு தெரியல்லியா?
குழந்தை என்ன ஆச்சு என்று தெரியுமா?
நல்லகாலம்! எஜமானி அம்மாளும் குழந்தையும் பொழைச்சிட்டாங்க! ஆனு அவங்களுக்கு என்னே அடையாளமே தெரியலே! நான் ஆஸ்பத்திரியிலே போய் பார்த்தேன்.
அப்புறம் மாமி
நான் அழுதேன். எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். எஜமானியம்மா மூளை புரண்டு போச்சு. அப்புறம் யாரோ சொந்தக்காரங்க வந்து அழைச்சிக்கிட்டுப் போனுங்க. நான் முத்துவோடே அப்போ இங்கே வந்தவள் தான். அப்புறம் நடந்ததோ தெரியாது!
எஜமானி அம்மா என்ன ஆனுங்களோ? இவனுடைய அப்பா எங்கே போனுரோ, ஒண்ணுமே தெரியாது!
உங்க கதையே ரொம்ப சோகமான கதை! உங்க எஜமானி அம்மா பேரு என்ன?
தொடரும்.




# பைஜாமாவின் ஆசை

பரிமேலழகன்

ஷரீபுக்குப் பைஜாமா போட்டுக் கொள்ளவேண்டும் என்று ஆசை. அவன் தாயார் தகப்பனார் ஏதாவது வாங்கித் தின்பதற்குக் கொடுக்கும் காசைச் சிறுகச் சிறுகச் சேர்த்து, 'ரெடி மேடாக' விற்கின்ற பைஜாமா ஒன்றை வாங்கினான். அது அவனுக்கு இரண்டு அங்குலம் நீளமாக இருந்தது. அவன் அதைத் தன் தாயிடம் கொண்டுபோனான். "அம்மா, இரண்டு அங்குலம் இது நீளமாக இருக்கிறது. நாளைக் காலையில் நான் பள்ளிக்கூடம் போட்டுக் கொண்டு போகவேண்டும். அதற்குள் இதை வெட்டித் தைத்துவிடு" என்றான். அப்போது அவன் அம்மா வேலையாக இருந்ததால், "சாயங்காலம் தைத்துத் தருகிறேன். வைத்துவிட்டுப் போ" என்றாள்.

ஷரீப் தன் தாயின் வார்த்தைகளை நம்பாதவனாக, தன் அக்காவிடம் பைஜாமாவை எடுத்துச் சென்று, "அக்கா, இதை இரண்டு அங்குலம் வெட்டித் தைத்துத் தா" என்றான். இவன் போன சமயம் அவனுடைய அக்கா தோட்டச் செடிகளை ஒழுங்குபடுத்தித் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள். அவள் தன் தம்பியிடம், "எனக்கு இப்போது வேலையாக இருக்கிறது. இரவு தைத்துத் தருகிறேன். வைத்துவிட்டுப் போ" என்றாள்.

ஷரீபோ ஒவ்வொருவரும் அப்போதே வெட்டித் தைத்துத் தருவார்கள் என்று எதிர்பார்த்தான். அவர்கள் அப்படிச் செய்யாததால் அவன் தன் தங்கையிடம் சென்று, "தங்கச்சி, இந்தப் பைஜாமா இரண்டு அங்குலம் நீளமாக இருக்கிறது. நீ இதைச் சரியாக வெட்டித் தைத்துத் தா" என்றான். அவளோ அதற்கு, "அண்ணா, நான் இப்போது பாடம் படித்துக்கொண்டிருக்கிறேன். நாளை விடியற்காலையில் வெட்டித் தைத்துத் தருகிறேன்" என்றாள். ஷரீப் அதிருப்தி அடைந்தவனாகச் சாப்பிட்டுவிட்டு வெளியே சென்றான்.

சொன்னபடி சாயந்தரம் ஷரீப்பின் தாயார் பைஜாமாவில் இரண்டு அங்குலம் வெட்டித் தைத்துவிட்டாள். இரவு ஷரீப்பின் அக்கா இரண்டு அங்குலம் வெட்டித் தைத்துவிட்டாள். விடியற்காலையில் ஷரீப்பின் தங்கை இரண்டு அங்குலம் வெட்டித் தைத்துவிட்டாள். மறு நாள் பள்ளிக்குச் செல்வதற்காக ஷரீப் ஆசையோடு பைஜாமாவை எடுத்து மாட்டினான். மாட்டினதுதான் தாமதம். பாம்பை மிதித்தவன் போல் தள்ளினான். உடனே அவன் தன் தாயாரிடம் சென்று, "யார் இந்தமாதிரி ஆறு அங்குலம் அதிகமாக வெட்டினது? நான் 2 அங்குலம்தானே உன்னை வெட்டச் சொன்னேன்? யார் இந்த மாதிரி செய்தது?" என்று கேட்டான்.

உடனே அவன் அக்காவும் தங்கையும் வந்தார்கள். அக்கா ஷரீப்பிடம், "தம்பி, நீ சொன்னபடி நான் இரண்டு அங்குலம் வெட்டித் தைத்துவிட்டேன்" என்றாள். பின்னால் வந்த தங்கையும், "அண்ணா, நீ சொன்னபடி நான் செய்தேன்" என்றாள். அப்போதுதான் ஷரீப்பிற்குத் தன் அசட்டுத்தனம் புரிந்தது. அவன் அன்று முதல் பைஜாமா ஆசையை விட்டு ஒழித்தான். அவன் வழக்கம்போல் கட்டிக்கொண்டு போகும் லுங்கியையே அன்றும் கட்டிக்கொண்டு பள்ளிக்குப் போனான்.




**கண்ணாடிக்காரர்: ராமாயணத்தில் ராமனுக்கு ஹநுமான் உதவி செய்தமாதிரி சமயத்தில் ஐந்து ரூபாய் கொடுத்து உதவினீர்கள். இந்த உதவியை நான் மறக்கவே மாட்டேன்.**

**—ஜோதிர்லதா கிரிஜா,**
**வத்தலக்குண்டு.**

# உருவத்தின் பரிசு




ரா. கண்ணன்

'டணார்-டணார்' என மணி பத்தடித்து விட்டு, ஓய்வு எடுத்துக் கொள்வதுபோல் மெதுவாக டக் டக் என்று மூச்சு விட்டுக் கொண்டிருந்தது கடிகாரம்.

ஆனால் அமைதி இழந்து ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தான் சுந்தரம். சிந்தித்து என்ன பிரயோஜனம்? அவனுக்கு வேண்டியது கதை. கதைக்கு வேண்டியது சிந்தனை. அதுதான் அவன் அருகில் செல்லவே மறுக்கிறதே! இதுவரையிலும் எவ்வளவோ கதைகள் எழுதியிருக்கிறான். அத்தனைக்கும் அவனுக்குப் பரிசு கிடைத்துக் கொண்டுதான் வந்தது. ஏன், அவனைவிட அந்தப் பள்ளியிலே யாரும் கதை எழுத முடியாது என்ற அளவுக்கு அவன் திறமை பரவி இருந்தது. அதுவே அவனுக்குப் பெருமையாகவும் இருந்தது. ஆனால் அதைச் சிதறடித்து விட்டான் ரங்கு.

ரங்கு, ஆம் - அவன்தான் சுந்தரத்தின் நேர்விரோதி. எப்பொழுதும் போல் இந்த முறையும் கதைப்போட்டியில் கலந்துகொண்டார்கள் பள்ளி மாணவர்கள். அந்தக் கூட்டத்திலேதான் ரங்குவும் சுந்தரமும் இருந்தனர். கீரியும் பாம்பும் போல எப்பொழுதும் சண்டை போட்டுக்கொண்டே இருப்பார்கள். அதுவும் கதை விஷயத்தில் சண்டை வந்து விட்டால், சுந்தரத்துக்கு அளவு கடந்த கோபம் வந்துவிடும். ஒவ்வொரு முறையும் கதைப் போட்டியில் வெற்றி மாலை சூடி வந்தான் சுந்தரம்.

அந்த மாலையைத்தான் இந்த முறை அறுத்தெறிந்துவிட்டான் ரங்கு. சுந்தரத்துக்கு அவமானம் தாங்கமுடியவில்லை. மேலும் மறுநாள் போட்டியில் கலந்துகொள்ளலாம் என்று நினைத்துக் கதை எழுத முற்பட்டாலோ கையும் ஓடவில்லை; கற்பனையும் ஓடவில்லை, தலையிலே கையை வைத்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தான். மூலையிலே கிழிந்து போயி




ருந்த தினசரிப் பேப்பர் ஒன்று தென்பட்டது. அதன் தலைப்பிலே, 'சிறுவன் தற்கொலை' என்று எழுதியிருந்தது. உடனே அந்தப் பேப்பரை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். அதாவது 'பத்து வயதுச் சிறுவன் ஒருவன் பெயிலாகிவிட்டதால் அவமானம் தாங்காது ஆற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டான்' என்று எழுதப்பட்டிருந்தது. இதைப் பார்த்ததும் சுந்தரத்துக்கு மூளை வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது.

'ஆம், தற்கொலை! அதுதான் நம் அவமானச் சின்னத்திற்கு ஏற்ற பரிசு! நாளைப் பள்ளிக்கூடம் சென்று பலர் முன்னிலையில் அவமானப்படுவதைக் காட்டிலும் ஆற்றில்விழுந்து இறப்பதேமேல்' என்ற எண்ணத்துடன் தன் அறையைச் சாத்திவிட்டுச் சுற்று முற்றும் பார்த்தான் சுந்தரம். பக்கத்து அறையிலே அவன் பெற்றோர்கள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். மெதுவாக அடிமேல் அடிவைத்து வெளி



துக்கொண்டே இருந்தது.

மெதுவாக ஆற்றங்கரையை வந்து அடைந்தான் சுந்தரம். ஆற்றின் மணலிலே சிலரும் ஆற்றங் கரையிலே சிலருமாக அமர்ந்து பேசிக்கொண் டிருந்தார்கள். அவனுக்கு இது சங்கடமாகத் தென்பட்டது. இருந்தாலும் இன்னும் சற்று நேரத்தில் இவர்கள் போன பிறகு தன் காரியத்தை முடித்துக் கொள்ளலாம் என்று வெள்ளைக் கம்பளம் விரித்தது போல் இருக்கும் மணற் பரப்பிலே தன் கையைத் தலையணையாக வைத்துக் கொண்டு படுத்தான். அவ்வளவு தான். சுந்தரம் தன் பெற்றோருக்குத் தன் தற்கொலையைப் பற்றிக் கடிதம் எழுதுவதற்குக் கையிலே பேப்பரையும் பேனாவையும் வைத்துக் கொண்டு,

யிலே வந்து விட்டான். நிலவொளி வீதியை 'ட்யூப்-லைட்' அலங்கரிப்பதுபோல் இருந்தது. அந்தத் தெரு நிச்சப்தமாகக் காணப் பட்டது. எங்கோ பக்கத்துத் தெருவில் ஊளையிடும் நாயின் சப்தம் மட்டும் விடாமல் அவன் காதில் ஒலித்

ஆற்றின் மணற் பரப்பிலே அமர்ந்திருந்தான்.

"யாரது?"-அவன் அமைதியைக் குலைத்தது அந்தக் குரல். குரல் வந்த திசையை நோக்கினன் சுந்தரம். என்ன பயங்கரம்? அவனுக்குப் பத்தடித் தூரத்திலே ஒரு கரிய உரு

வம். முகம், கைகால்கள் எல்லாம் கறுப்புத் துணியால் மூடப்பட்டிருப்பது போல் தெரிந்தது. அதைப் பார்த்த சுந்தரத்துக்குத் தலை சுற்ற ஆரம்பித்துவிட்டது. மெதுவாக எழுந்து போய்விடலாம் என்று எண்ணியபோது அந்த உருவம், "இந்த இடத்திலிருந்து ஓர் அடி கூட நகரக் கூடாது. அப்படி நகர்ந்தால்-?" என்றது. சுந்தரம் அரண்டு விட்டான். அந்த உருவம் அவன் அருகில் வர வர, சுந்தரத்தின் பயமும் அதிகரித்துக்கொண்டே இருந்தது. கண்களை இறுக மூடிக் கொள்ளலாமா என்று நினைத்தான். கண்ணை மூடிக் கொண்டால் என்ன ஆகுமோ என்ற பயமும் அவன் மனத்தில் தோன்றியது. கொஞ்சம் கொஞ்சமாகத் தைரியத்தை வரவழைத்துக்கொண்ட சுந்தரம், "நீ யார்? உனக்கு என்ன வேண்டும்?" என்று படபடக்கும் தன் நெஞ்சைத் திடப்படுத்திக்கொண்டு கேட்டான். "நீ பயப்படாமல் இருந்தால் நான் சொல்லுகிறேன்" என்று கூறிக்கொண்டே அந்த உருவம் அருகில் வந்து அமர்ந்தது.

"சரி, பயப்படவில்லை; சொல்" என்றான் சுந்தரம். உருவம் சொல்ல ஆரம்பித்தது:

"நான் பக்கத்துக் கிராமத்திலே இருக்கும் பள்ளிச் சிறுவர்களிலே ஒருவன். எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தான் என் பெற்றோர்கள் என்னைப் படிக்கவைத்தார்கள். ஊக்கத்தோடுதான் நான் படித்தேன். ஆனால் என் துரதிருஷ்டம், என்னைப் பாஸ் செய்யவிடாமல் தடுத்துவிட்டது. நான் பெயிலாகி விட்டேன். என்னுடன் படித்த மற்றப் பையன்கள் எல்லாம் என்னைப் பார்த்து ஏளனம் செய்தார்கள். கண்ட இடமெல்லாம் என்னைத் தூற்றினார்கள். என் பெற்றோர்களும் என்னைக் கோபிக்கத்தான் செய்தார்கள். என்றால் இந்த அவமானத்தை எல்லாம் பொறுக்க முடியவில்லை. உடனே என் பெற்றோருக்கு ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு நான் இந்த ஆற்றிலே விழுந்துவிட்டேன். அதிலிருந்து இந்த உருவத்தில்தான் உலாவுகிறேன். ஆனால் ஒன்று மட்டும் எனக்கு இப்பொழுது தெரிகிறது—"

"என்ன அது?" - கண்ணீரால் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டே கேட்டான் சுந்தரம்.

"அதுதான் என் முட்டாள் தனம். அறிவிழந்து நான் அப்பொழுது தற்கொலை செய்து கொண்டு விட்டேன். ஆனால் அதன் பலனை நான் இப்பொழுது தான் அநுபவிக்கிறேன். காரணம் நான் தற்கொலை செய்து கொள்ளாமல் கஷ்டப்பட்டு, அவமானத்தைப் பொறுத்துக்கொண்டு மறுவருஷம் முயற்சி செய்திருந்தால் நான் கண்டிப்பாகப் பாஸ் செய்திருப்பேன்.

"அப்படி முயற்சி செய்யாமல் அறிவை இழந்து, என் பெற்றோருக்குத் தீராத துக்கத்தையும் உண்டு பண்ணிவிட்டு, இப்படிக் கோழை போல் தற்கொலை செய்து கொண்டதனால் பிறர் என்னைப் பார்த்துப் பயந்து, தூற்றும் படி ஆகிவிட்டேன். உன்னைப் போல் ஆத்திரம் அடைந்த வாலிபர்களெல்லாம் தற்கொலை செய்து கொள்ளாதவாறு அவர்களுக்கு என் முட்டாள்தனத்தைக் கூறி, அவர்களை நல்ல வழியில் திருப்பி,

அதன் மூலம் என் பாபத்துக்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளலாம் என்றுதான் நான் இங்கேயே உலாவுகிறேன்'' என்று கூறிவிட்டு, சுந்தரத்தின் பதிலைக் கூட எதிர்பார்க்காமலேயே அந்த உருவம் விரைந்து ஆற்றிலே குதித்து விட்டது.

'படார்' என்ற சத்தத்தைக் கேட்டுக் கண்விழித்த சுந்தரத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. வானத்திலே சந்திரன் மேகங்களைத் தள்ளியபடி விரைந்தோடிக் கொண்டிருந்தான்.

அப்பொழுதுதான் தான் கண்டது ஒரு கனவு என்று அவனுக்குத் தோன்றியது. இருந்தாலும் அது கனவல்ல; சுந்தரத்தின் கெட்ட புத்தியைப் போக்க வந்த தோற்றம் என்றுதான் சொல்லவேண்டும். சுந்தரம் எழுந்தான். 'என் - இந்தக் கனவையே ஒரு கதையாக அமைத்துவிட்டால் கண்டிப்பாக நாளைப் பரிசு பெறலாமே!' என்ற எண்ணத்தோடு மெதுவாக வீட்டுக்குள் நுழைந்தான். இப்பொழுது அவன் அறை அமைதியோடு காட்சி அளித்தது. அதோடு அவன் மனத்திலே கற்பனையும் உருவாகியது. கதை எழுத ஆரம்பித்து விட்டான்.

'உருவத்தின் பரிசு' என்ற தலைப்பிலே கதை ஓடிக்கொண்டிருந்தது. மறு நாள் சாயங்காலம், 'உருவத்தின் பரிசு' என்ற கதையைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். அதன் பொருட்டு சுந்தரத்துக்கு ஒரு வெள்ளிக் கோப்பையும் பரிசளிக்கப் பட்டது.

## நல்ல ஞாபகம்

சங்கரன் ராபர்ட்ஸன் . கம்பெனியில் ஒரு கிளார்க். கணேசன் அந்தக் கம்பெனியின் மானேஜர்.

ஒரு நாள் சங்கரனுக்கு ஒரு தந்தி வந்தது. அதில் அவன் தாய் இறந்து விட்டதாகவும் உடனே புறப்பட்டு வரவேண்டும் என்றும் கண்டிருந்தது. சங்கரன் கவலையுடன் மானேஜர் அறைக்குள் லீவு கேட்க நுழைந்தான். அவர் டிபன் சாப்பிடச் சென்றிருந்தார். அவன் தந்தியை அவர் மேஜைமேல் வைத்தான். அதன் பின்பக்கம் இரண்டு நாட்கள் லீவில் ஊருக்குப் போவதாக எழுதி வைத்துவிட்டுச் சென்றான்.

ஸ்டேஷனில் வண்டி நின்றது. சங்கர் ஒரு வண்டியில் ஏறிக் கொண்டான். அதே 'கம்பார்ட்மெண்'டில் அவனுடைய மானேஜரும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். மெல்ல அருகில் போய், "எங்கே போகிறீர்கள்?'' என்றான்.

அவர், "என் தாய் இறந்து விட்டாளாம். அதனால் என் ஊருக்குச் செல்கிறேன். நீங்கள் எங்கே போகிறீர்கள்?'' என்றார். "என் தாயும் இறந்துவிட்டாள். தந்தி வந்தது. தந்தியின் பின்புறத்தில் 'லீவ் அப்ளிகேஷன்' எழுதி உங்கள் மேஜை மேல் வைத்திருந்தேனே, நீங்கள் பார்க்கவில்லையா?'' என்றான் சங்கர்.

"ஐ ஸீ! நான் அதைப் பார்த்து என் தாய் இறந்து விட்டதாக நினைத்தேன். சீ, என்ன முட்டாள்தனம், ஞாபகமறதி! என் தாய் இறந்து ஐந்து வருஷமாகிறதே'' என்று வண்டியை விட்டுக் கீழே இறங்கினார் மானேஜர்.

# மூன்று வரங்கள்

பீலோ இருதயநாத்

நந்தன் என்பவன் நீலகிரியில் ஒரு தேயிலைத் தோட்டத்திலே கூலி வேலை செய்துகொண்டிருந்தான். காலையில் சங்கு ஊதியதும் வேலைக்குச் சென்றால் மறுபடியும் மாலைதான் அவன் வீட்டிற்கு வருவான்.

நந்தனுக்குக் கோபாலன் என்று ஒரு பையன் இருந்தான். அவன் வகுப்பில் முதல் பையனாக வாசித்து வந்தான். தனிமையையே அதிகமாக விரும்புவான் கோபாலன். அதனால் தினம் அவன் பள்ளியிலிருந்து வந்ததும், பள்ளிப் பாடங்களைக் கொஞ்சதூரத்திலிருந்த ஒரு மரத்தின்மேல் உட்கார்ந்து வாசிப்பது வழக்கம்.

கோபாலன் பனியில் மரத்தின் மேல் உட்கார்ந்து இவ்விதம் வாசிப்பது தாயாருக்குப் பிடிக்காது. "ஏண்டா, அங்கே எல்லாம் பனியில் போறே!" என்று அடிக்கடி கூறுவாள். "தனியாக உட்கார்ந்து வாசித்தால்தான் எனக்கு நிம்மதியாகப் படிக்க முடிகிறது, அம்மா!" என்று கூறிவிடுவான்.

அன்று அவன் வீட்டுக்கு வர வெகு நேரம் ஆகிவிட்டது. தாயார் மிகவும் கோபித்துக் கொண்டாள்.

"ஏண்டா, இவ்வளவு நேரம்? மரத்தின்மேல் இருட்டியபின் எப்படி வாசித்தாய்!" என்று கேட்டாள், கோபாலனின் தாய் கமலம். ஏதோ ஒரு சாக்குச் சொல்லித் தப்பித்துக்கொண்டான் கோபாலன்.

மறுநாள் காலையில் தேயிலைத் தோட்டம் முழுவதும் ஒரே அமளியாக இருந்தது. "மார்ட்டின் துரை, கூலி ஆட்களுக்காக வைத்திருந்த பொங்கல் போனஸ் ரூ. 5000 திருட்டுப் போய் விட்டது" என்று மூலை முடுக்கு எல்லாம் பேசிக் கொண்டார்கள். சிறிது நேரத்திற்கு எல்லாம் எஸ்டேட் துரையும் வந்தார். எல்லா எஸ்டேட் கூலிகளையும் ஒன்றாக நிறுத்தினர்.



"நேற்றுப் பாங்கியிலிருந்து ரூ. 5000 பொங்கல் போனஸுக்காக எடுத்து என் வீட்டில் தோல் பையுடன் மேஜையின்மேல் வைத்தேன். சிறிது நேரம் கழித்து அந்தப் பையைக் காணோம். அதைக் கண்டு பிடிக்கும் வரையில்



உங்களுக்குப் போனஸ் பணம் கொடுக்க இயலாததைக் குறித்து வருந்துகிறேன். அதைக் கண்டு பிடித்து யார் சொல்லுகிறீர்களோ, அவர்களுக்கு ரூ. 500 வெகுமதி கொடுக்கப்படும்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார் துரை.

இதைக் கேட்டதும் சிலர், ''ஐயோ, போனஸ் பணம் போய் விட்டதே'' என்று வருந்தினர். கண்டு பிடித்தால் ரூ. 500 கிடைக்குமே என்ற சபலம் சிலருக்கு.

மறு நாள் பொங்கலுக்காக எஸ்டேட் முழுவதும் விடுமுறை. ஆனால் திடீரென்று அன்று காலை சங்குச் சத்தம் கேட்டதும் விவரம் தெரியாமல் தொழிலாளர்கள் எல்லாரும் எஸ்டேட் ஆபீசுக்கு ஓடி வந்தார்கள். ''பணம் கிடைத்து விட்டது. நீங்கள் போனஸ் பணம் வாங்கிக் கொள்ளலாம். இங்கே வேலை செய்யும் நந்தனுடைய மகன் கோபாலன்தான் பணத்தைக் கண்டுபிடித்தான். நல்ல பையன். உங்கள் எதிரிலேயே பரிசு ரூ. 500 அவனுக்குக் கொடுக்கிறேன்'' என்று கூறி 500 ரூபாயை அவன் கையில் கொடுத்தார் துரை. இதைக் கண்ட நந்தனுக்கும் கமலத்துக்கும் ஆச்சரியமாக இருந்தது. எப்படிக் கண்டுபிடித்தான் என்று இருந்தது.

அன்றிரவு கமலம் கோபாலனைத் தனியாகக் கூப்பிட்டு, ''என்



கண்ணே! எப்படியடா கண்டு பிடித்தாய்?'' என்று கேட்டாள்.

''நான் வழக்கம்போல் மரத்தின் மேல் உட்கார்ந்து வாசித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று யாரோ மரத்தடியில் ஓடி வரும் சத்தம் கேட்டது. யார் என்று கவனித்தேன். மங்கின இருளில் முகம் சரியாகத் தெரியவில்லை. அந்த உருவம் எதையோ ஒரு மூட்டையைக் கொண்டு வந்து, நான் உட்கார்ந்திருந்த மரத்திற்குச் சற்றுத் தூரத்திலே ஒரு தேயிலைச் செடியின் அடியில் புதைத்தது. உடனே சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே ஓடிவிட்டது. அது யார் என்று தெரிந்து கொள்வதற்காக நானும் மறைந்து மறைந்து,பின்னாலேயே போனேன். கடைசியில் அந்த உருவம் தன் வீட்டுக்குள் நுழைந்தது. பின்பு தான் யார் என்று நன்றாகத் தெரிந்து கொண்டேன்.

''அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. மறு நாள் காலை ரூ. 5000 திருட்டுப் போய் விட்டது என்ற செய்தி தெரிந்தது. எனக்குச் சந்தேகம் தோன்றவே அந்த இடத்திற்குப் போய், தோண்டிப் பார்த்தேன். அடியிலே துரையின் தோல் பை இருந்தது. உடனே அதை எடுத்துக் கொண்டு போய்த் துரையின் மேஜையில் வைத்து விட்டு, யார் கண்ணிலும் படாமல் திரும்பும்போது, துரையின் நாய் என்னைப் பார்த்துக் குலைத்தது. சத்தம் கேட்டு அங்கே வந்த துரை கையைப் பிடித்துக்கொண்டு விட்டார். மேஜையின்மேல் இருந்த அவர் பையையும் பார்த்துவிட்டார்.

''நான் விஷயத்தைச் சொல்வதற்கு முன், 'எனக்கு மூன்று வரம் தாருங்கள். பிறகு என்ன வேண்டுமானாலும் சொல்லுகிறேன்' என்றேன். 'சரி' என்றார் அவர். உடனே சொன்னேன். 'ஒன்று: எனக்கு 500 ரூபாய் வேண்டாம். இரண்டு: திருடிய ஆள் யாரென்று உங்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியக்கூடாது. மூன்று: திருடிய ஆளை வேலையிலிருந்தும் நீக்கக்கூடாது.' அவர் அதைச் செய்வதாகக் கூறிச் சத்தியம் செய்தார். நீ கண்டுபிடித்ததற்காகவும், உன் தங்கமான குணத்திற்காகவும் பணத்தைப் பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று பிடிவாதம் செய்தார் துரை. மிகவும் வருத்தத்தோடு பணத்தைப் பெற்றுக் கொண்டேன்'' என்று கூறி முடித்தான் கோபாலன்.

''எல்லாம் சரிதான்! விளக்கின் வெளிச்சத்திலே அந்த ஆளைப் பார்த்தேன் என்று சொன்னாயே, கடைசியில் யார் என்றே சொல்லவில்லையே'' என்று கேட்டாள் கமலம்.

இந்தக் கேள்வியைக் கேட்டதும் கோபாலனின் முகம் பரிதாப

.மாக மாறியது. தாய் வற்புறுத்தவே, காதோடு காதாய் யார் என்பதைக் கூறினான். அவள் உடனே திடுக்கிட்டாள். தன் கழுத்தில் இருந்த மாங்கல்யத்தை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். "என் கண்ணே, நீதாண்டா உத்தமமான மகன்" என்று அவனை அப்படியே கட்டிக்கொண்டு கண்ணீர் விட்டாள்.



# நாய் வால்

**சங்கரசுப்பு**

எலக்டிரிக் ரெயில் வண்டி ஓடிக் கொண் டிருந்தது. வேக மாக ஓடிக்கொண் டிருந்தது என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் நாங்கள் பிரயாணம் செய்துகொண்டிருந்த வண்டி சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய வண்டி.

அமெரிக்கச் சாமான் என்றால் கேட்க வேண்டுமா, அதன் அமரிக்கையைப்பற்றி? புதிசு வேறு. கேட்பானேன்? பிரமாத வேகத்துடன் சப்தமின்றி ஓடிக் கொண்டிருந்தது.

எல்லாமே புதிதாக இருக்கும் போது நன்றாகத்தான் இருக் கிறது! பிறகுதான் புளித்து விடு கிறது. புதிதின் இன்பம் புதிதாய் இருப்பதால்தான் நன்றாயிருக் கிறதோ, ரஸிக்கத்தக்கதா யிருக் கிறதோ!

ஒரு வேளை, புதிதின் புது இன் பத்தை அநுபவிக்கையில் நாம் புதிதாய் மாறிவிடுகிறபடியால் அந்த இன்பம் நன்றாயிருக் கிறதோ என்னவோ!

நானும் என் சித்தப்பாவும் சயானிலிருந்து தாதருக்குச் சென்று கொண்டிருந்தோம்.

நாங்கள் எதிர் எதிர்ப் பெஞ்சு களில் எதிரும் புதிருமாய் உட் கார்ந்தோம்.

வண்டி மாதுங்காவில் நின்றது. நின்ற சுருக்கில் என் பக்கத்தில் இருந்த காலி இடத்தில் கோவா வைச் சேர்ந்த ஓர் இளைஞன் வந்து உட்கார்ந்துகொண்டான். அவனைப் பார்த்தேன். தலையின் முன்பாகத்தில் ஒரு சிறு எலிபோல் கும்மாச்சியாய்ச் சிகையைச் சுருட்டி வைத்துக்கொண்டு தலையை வாரிக்கொண் டிருந்தான். முகத்தில் வழிந்த களை அருவருப் பை உண்டு பண்ணியது. அரையில் அணிந்திருந்த சிராயின் பட்ட மாகத் திகழ்ந்தது ஒரு பிளாஸ்டிக் 'பெல்ட்'. சிராயின் பின்பக்க ஜேபி யில் ஒரு சிகரெட் டப்பா திணிக் கப்பட்டிருந்தது. அந்தப் பையி லேயே ஒரு சீப்பும் செருகி யிருந்தது. முழுக் கை, அரைக் கை என்று இரண்டும் இல்லாத ஒரு இரண்டுங் கெட்டான் வகையில் மடித்த முழுக் கை அரைக் கைச் சொக்காய். சொக்காயின் கலர்—கலரா அது? காலராதான்! புது வெள்ளத்தின் நிறத்தை ஒத்தி ருந்தது. புது வெள்ளத்தில் மிதந்துவரும் ஆடு மாடுகள், கோழிகள், மரங்கள், வைக்கோல் போர்கள், கட்டில்கள், சட்டிப் பானைகள் போலவே சட்டை முழுவதும் பலவித வர்ணச் சித்தி ரங்கள் வியாபித்திருந்தன. சிரா யின் நீண்ட கால்களை, காலில் அணிந்திருந்த 'சாக்ஸ்' தெரியும் படி மடித்து விட்டிருந்தான். கையில் ஒரு 'த்ரில்லர்' நாவல்.

எதிர் வீட்டில், என் சித்தப்பா வின் பக்கத்தில் ஓர் ஆள் உட்

காரக் காலியாயிருந்த இடத்தில் ஒரு காலை அலட்சியமாகத் தூக்கி வைத்தான்.

இடது கையிலிருந்த 'த்ரில்ல' ரைப் பிரித்துப் படித்துக் கொண்டே வலது கையால் பின் பக்கச் சிராயிலிருந்த சிகரெட் டப்பாவை எடுத்துத் திறந்து ஒரு சிகரெட்டை எடுத்தான்.

புத்தகத்தின் வரிகளில் கண்களை ஓட்டிக்கொண்டே சிகரெட்டை, அதன் நுனியைப் பக்குவம் செய்ய, புத்தகத்தின் மேலட்டையில் மிளிர்ந்த ஒரு மாது சிரோண்மணியின் ரோஜாக் கன்னத்தில், அவன் அறியாமலே பதியத் தட்டிவிட்டு உதட்டில் சிகரெட்டைச் செருகினான்.

சுர்ர்!

புத்தகத்தில் கண். வாயில் புகையுடன் வெளி வந்து கொண்டேயிருந்தது, சிரிப்பு. புத்தகத்தில் ஏதோ ஹாஸ்யம் போலும்!

வாயிலிருந்த சிகரெட்டைக் கையில் எடுத்து அதன் நுனியில் கண்டிருந்த சாம்பலைக் கீழே தட்டிக்கொண்டே இன்னொரு காலையும் சுவாதீனமாக எதிர்ப் பெஞ்சியில் படரவிட்டு, சாய்வாக உட்கார்ந்துகொண்டான்.

என் சித்தப்பாவின் முகத்தைப் பார்த்தேன். அதில் அருவருப்புக் கூடிவிட்டது. அவன் மரியாதையில்லாமல் தன் மேல் படுவது போல் காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தது அவருக்குப் பிடிக்கவில்லை. போதாக் குறைக்கு பூட்ஸ் போட்டிருந்த காலை வேறு ஆட்டிக்கொண்டிருந்தான்.



"மிஸ்டர்!" பொறுமை யிழந்து என் சித்தப்பா கூப்பிட்டார்.

அவன் கேட்கவில்லை.

"மிஸ்டர், உங்களைத்தான்!"

ஒரு வேளை தன்னைக் கூப்பிடுகிறாரோ என்ற சந்தேகத்துடன் புத்தகத்தில் ஊன்றிப்போயிருந்த பார்வையை உயர்த்தினான்.

"உங்களைத்தான், மிஸ்டர்!"

"என்னையா? என்ன?"

"போன வாரம் 'ஜென்டில்மென்' என்னும் வாரப் பத்திரிகையில், 'நல்ல - கெட்ட பழக்க வழக்கங்கள். நல்லதைத் தெரிந்துகொள்வது எப்படி? கெட்டவைகளை ஒழிப்பது எப்படி?' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்ததே, நீங்கள் படித்தீர்களோ?"

அந்த இளைஞன் முகத்தில் பிரகாசம் புரண்டது. உடம்பை நாசுக்காக ஒரு குலுக்குக் குலுக்கிக்கொண்டு ஆசையாய்ச் சிகரட்டை இழுத்தான்.

"ஆமாம். நீங்கள் படித்தீர்களோ? எப்படியிருந்தது? நன்றாயிருந்ததா? எப்படி வெள்ளிடைமலையாய் மனிதர்களுடைய நல்ல, கெட்ட பழக்க வழக்கங்களை கட்டுரை தெரிவிக்கிறது. நான்தான் எழுதினேன். பாமரர்கள் கூடப் புரிந்துகொண்டு அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தெளிவாய், எளிமையான நடையில் புரியும்படி விரிவாக எழுதினேன். உங்களுக்குப் பிடித்ததா?"

என் சித்தப்பாவுக்குக் கிணறு வெட்டப் பூதம் கிளம்பின ஆச்சரியம் உண்டாகிவிட்டது.

"நீங்கள்தான் எழுதினீர்களா? உங்கள் கட்டுரை எனக்குப் பிடித்தது. ஆனால் இது பிடிக்கவில்லை" என்று கூறிக்கொண்டே தன் ஆள்காட்டி விரலினால் தன் பக்கத்தில் நீட்டி வைத்திருந்த அவன் கால்களைச் சுட்டிக் காட்டினார்.

"ஓ, இதுவா?"

"ஊருக்குத்தான் உபதேசமா? நீங்கள் கடைப் பிடிக்க வேண்டியதில்லைபோலும். உலகமே இப்படித்தான். பிறத்தியாருக்கு எதையும் புகட்டத் தயாராய் இருக்கிறது. தன்னிடம் நல்லொழுக்கங்கள் இருக்கின்றனவா, தான் ஒழுங்காயிருக்கிறோமா என்றெல்லாம்




**அப்பா: என்னடா இது? அரைப் பரீட்சையில் மகா மோசமாக 'மார்க்' வாங்கியிருக்கியே!**

**தம்பி: என்னப்பா இது! தாத்தாவானால், 'உன் அப்பாவை விட நீ நன்றாய்ப் படிக்கிறாயே! பேஷ்!' என்று என்னைத் தட்டிக் கொடுக்கிறார்! நீ என்னவோ நான் மகா மோசமாகப் படிப்பதாகச் சொல்றியே!**

—ஜோதிர்லதா கிரிஜா.

கவலைப்படுவதில்லை. புகட்டுவது மாத்திரமில்லை; புகட்டும் தினுசில் நடக்க எதிர்பார்க்கிறது. கண்டிப்பாக எதிர்பார்க்கிறது.''

கால்களைப் பெஞ்சை விட்டு எடுக்காமலே அவன் சொன்னான்: ''வாஸ்தவம், நீங்கள் சொன்னது. எனக்கே என் குறைகள் தெரிகின்றன. ஆனால் என்னால் அவைகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியவில்லை. நான் தான் கெட்டவனாக இருக்கிறேன். பிறராவது நல்லவர்களாகத் திருந்தட்டுமே. என்ன சொல்கிறீர்கள்? என்னிடம் குறைகள் இல்லையென்றால் அந்தக் கட்டுரையே என்னால் எழுதியிருக்க முடியாது.''



''நீங்கள் சொல்வதும் உண்மைதான். ஆனால் நீங்கள் உங்களிடமிருக்கும் கெட்ட பழக்கங்களைப் போக்க முயலுங்கள். நீங்கள் முயற்சி செய்வதாய்கூடத் தெரியவில்லையே'' என்று என் சித்தப்பா சிரித்துக்கொண்டே சொன்னார். அவனும் சிரித்துக்கொண்டே கால்களைக் கீழே தணியப் போட்டான். என் பக்கம் திரும்பி, வாயிலிருந்த புகையை, 'புஸ், புஸ்' என்று வெளிவிட்டான். சிகரெட் புகை எனக்குப் பிடிக்காது. வாயால் ஊதிப் புகைப் படலத்தை அவன் பக்கமே திருப்பிவிட்டேன்.

''போவோமா, தாதர் வந்துவிட்டது!''

''ஓ'' என்று சொல்லிக் கொண்டே என் இடம் விட்டெழுந்தேன்.

''நான் வருகிறேன், மிஸ்டர். உங்கள் பெயர்? நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று தன் புதிய நண்பரிடம் விடை பெற்றுக் கொண்டார் என் சிறிய தகப்பனார்.

''என் பெயர் ஆர். எஸ். வாஸ். நானும் தென்னிந்தியன்தான். ராமானுஜ ஸ்ரீநிவாஸன் என்பது என் முழுப் பெயர்.''

சித்தப்பாவுக்கு ஆச்சரியமாய்த்தானிருந்திருக்கவேண்டும். அவர் வினாவில் தெரிந்தது அது.

"ஓகோ! அப்படியா? சரி நான் வரட்டுமா?"

"சரி, போய் வாருங்கள்" என்று விடை கொடுத்தார் ஆர். எஸ். வாஸ்.

வண்டியை விட்டு இறங்கி, பிளாட் பாரத்தில் நடந்துகொண்டிருந்தோம்.

எங்களைக் கொண்டுவிட்ட வண்டி கிளம்பி ஊர்ந்தது. ஓடத் தொடங்கின வண்டியிலிருந்து ஒரு சிகரெட் துண்டு — தணலுடன் கூடிய துண்டு—என் சித்தப்பாவின் காலடியில் வந்து விழுந்தது.

என் பார்வை உடனே ஓடிய வண்டியில் பாய்ந்தது. பார்த்துடன் சிரிப்பு வந்துவிட்டது.

"பார்த்தீர்களா? சிகரெட் விட்டெறிந்தது உங்கள் புதிய நண்பர் தான். 'நல்லபழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற கட்டுரையை எழுதிய மன்னன்."

"நிஜமாகவா?"

"ஆமாம். அநாயாஸமாக எதிர்ப் பெஞ்சியில் இரு கால்களையும் தூக்கிப் போட்டுக்கொண்டு இன்னொரு சிகரெட்டை உதட்டில் செருகி ஆயத்தம் செய்துகொண்டிருந்தான். பார்த்தேன்."

"உடம்போடு பிறந்த குணம். சுட்டுப் போட்டால்கூடத் தெரியாது" என்றார் என் சித்தப்பா. நாங்கள் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தோம்.

## கைக்கு எட்டியது

வாசல் பக்க அறையில் அன்றைத் தினசரியைப் படித்துக் கொண்டிருந்தார் அப்புசாமி.

அப்புசாமி ஜோஸ்யப் பகுதி எழுதி வருகிறார். 'அவர் எழுதும் ஒவ்வொரு ராசிக்கும் பலன்கள் எழுதியபடி நடக்கிறதா?' என்று கேட்டால், அது வேறு விஷயம்.

"ஸார்!" என்ற கரகரப்பான குரலொன்று அழைத்தது.

வெளியே கிருதா மீசையை முறுக்கிவிட்டவாறு நின்று கொண்டிருந்தான் ஓர் ஆசாமி! அப்புசாமியின் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணத் தலைப்பட்டது.

"இதுதானே அப்புசாமி வீடு?"

"எந்த அப்புசாமி?"

"அவர்தான் ஜோஸ்யப் பகுதி எழுதுகிறாரே.."

"அடாடா!.. அவர் ஊரிலேயே இல்லையே!.."

"சரி, அவருக்கு அதிர்ஷ்டமில்லை. ஆமாம், அவர் எப்பொழுது திரும்பிவருவார்?.."

"வர இரண்டு நாட்களாகும். அவருக்கு அதிர்ஷ்டமில்லை என்று ஏதோ கூறினீர்களே.. அது.."

"..இல்லை..அவர் சென்ற வாரம், 'ரிஷப ராசிக்காரர்களுக்கு எதிர்பாராத விதமாக நஷ்டம்' என்று எழுதிருந்தார். எப்பொழுதும் அவர் எழுதியதற்கு மாறாகத்தானே எல்லாம் நடக்கிறது! எனக்குப் பத்தாயிரம் ரூபாய் கிடைத்தது. ஆகவே, நான் அவருக்கு அன்பளிப்பாக ஏதோ கொஞ்சம் கொடுத்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்.." என்று சொல்லிக்கொண்டே போனான் அந்த மனிதன். பாவம்! அப்புசாமி, அசடுவழிய நிலைப்படியிலேயே நின்றுவிட்டார்!

—என். கே.

# கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(T) 111. தியாகராஜன், மீனாக்ஷி, R., திருவையாறு. 112. தத்தாத்திரி, K., சங்கரநயினார்கோயில். 113. தமிழரசன், தேவராஜாமணி, K., கொழும்பு. 114. திருநாவுக்கரசு, C., பருத்தித்துறை. 115. தங்கம், கண்ணன், P. R., பங்களூர். 116. தாண்டவன், M., சிலோன். 117. திருவேங்கடம், மதுரை. 118. தியாகராஜன், R., சென்னை-17. 119. தங்கப்பன், மணி, V., கோயம்புத்தூர். 120. தங்கமணி, பாஸ்கரன், ஜம்புராஜன், K.A.S., சிவகாசி. 121. தணிகாசலம், A., வையம்பாளையம். 122. திருவேங்கடாச்சாரி, P. G., மேட்டூர். 123. தங்கராஜா, K., கொழும்பு, 2. 124 தியாகராஜன், S. M., ஏ. புத்தூர். 125. தங்கவேல், M., தாத்தையங்கார் பேட்டை. 126. தணிகைவாசன், R., சென்னை-4. 127. திருநாவுக்கரசு, A., சென்னை-2. 128. திருகாமு, K., புதுச்சேரி. 129. திருநாவுக்கரசு, பிரமீளா, சந்திரசேகரன், சென்னை-21. 130. திருப்பதி, N., மேட்டூர். 131. தங்கவேலன், T., உடுப்பிட்டி. 132. தியாகராஜன், T., புதுக்கோட்டை. 133. தியாகராஜன், காவலப்பட்டி. 134. தங்கம், T., செங்கோட்டை. 135. தாஜுதீன், N., கண்டி. 136. தனபால் சிங்கம், S., நல்லூர். 137. தியாகராஜா, S., யாழ்ப்பாணம். 138. தம்பிராஜா, S., நவகிரி. 139. தமிழரசன், T., சிங்கப்பூர். 140. தலைஸக்காணி, C., மதுரை. 141. தியாகராஜன், C. R., கோயம்புத்தூர். 142. திருநாராயணன், S., சேலம். 143. தனகோடி, நாகலிங்கம், N., பாலப்பட்டி, 144. திருப்பதி, P., திருவனந்தபுரம். 145. திருமால், M.V., சின்ன காஞ்சீபுரம். 146. தியாகராஜன், M., தஞ்சாவூர். 147. தாஜகாதுன், M., வாணியம்பாடி. 148. தங்கராஜு, சென்னை-17. 149. தங்கமுத்து, L., உடுமலைப்பேட்டை. 150. திருநாவுக்கரசு, V. G., சென்னை - 5. 151. தியாகராஜன், மீட்டாலை. 152. திருமலைசாமி, V., கோயம்புத்தூர். 153. தியாகராஜன்,

இங்கே கத்தரிக்கவும்

**கண்ணன் கழகம்**

**அங்கத்தினர் பதிவு கூபன்**

(கட்டணம் இல்லை)

பெயர் ............................

விலாசம் ............................

............................

பிறந்த தேதி............................

(தேதி, மாதம், வருஷம்)

மார்ச். 15-'54 கூபன் கெ:

J., கடலூர். 154. திருவள்ளார் வெள்ளையன், V., அறந்தாங்கி. 155. தாமஸ், R., இருப்பை. 156. தியாகராஜன், C. R., கோயம்புத்தூர். 157. தியாகராஜன், R. C., கோடைக்கானல். 158. திருஞானமூர்த்தி, கோபிநாயக்கன் பட்டி. 159. தியாகராஜன், A. V., ஸ்ரீரங்கம். 160. தனபால்சிங்கம், S., யாழ்ப்பாணம். 161. தியாகராஜன், N., புஷ்பவனம். 162. தியாகராஜன், S., முடிகொண்டான். 163. தியாகராஜன், S. S., திருவாரூர். 164. தியாகராஜன், C. R., கோயம்புத்தூர். 165. தியாகராஜா, S., யாழ்ப்பாணம். 166. திருச்செல்வன், V., சிலோன். 167. தணிகாசலம், N., சென்னை-5. 168. தாஹிர், M. A., சிலோன். 169. தங்கவேலு, K.

★★★★★★★★★★★★★★★★

# கண்ணன்

## கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன் களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★

N., பாளையங்கோட்டை. 170. திகம்பரன், நாகபுரி. 171. தியாகராஜன், நாகபுரி. 172. திருஞானம். P., மதுரை. 173. திருமூர்த்தி, C., கணபதிபாளையம். 174. திருநாவுக்கரசு, B. G., பன்ருட்டி. 175. திருவேங்கடசாமி, V., பட்டுக்கோட்டை. 176. தியாகராஜன், J., திருத்தருப்பூண்டி. 177. தில்லையம்பாள், A., மணிப்பாய். 178. தங்கவேல், R., சிங்கப்பூர் - 8. 179. தியாகராஜன், சொக்காம்பட்டி. 180. தங்கமுத்து, V., சித்தாலங்குடி. 181. தாவேந்திரன், N., சிலோன். 182. திருநாவுக்கரசு, R., சென்னை. 183. திருஞானசம்பந்தன், G., (விலாசம் இல்லை). 184. தில்லைசந்திரன், V., யாழ்ப்பாணம். 185. தாமஸ், J. A., தேனி. 186, தங்கவேல், A., எரிபாளையம். 187. திருப்பதி, M., ராசிபுரம். 188. தண்ணீர்மலை, N. R., முத்துப்பட்டினம். 189. திருச்செல்வன், V., காரவெட்டி. 190. திருநாவுக்கரசு, K., மதுரை. 191. தியாகராஜன், M., திருக்காட்டுப்பள்ளி.

(U) 32. உமாகாந்த், G., வாலாஜாபாத். 33. உமாமகேஸ்வர், கார்த்திகேயன், B., நாகபுரி. 34. உமாதேவி, கோபதி, S. V., புதுடில்லி. 35. உலகநாதன், S., புதுச்சேரி. 36. உமாராணி, R., சென்னை - 23. 37. உலகநாத பிள்ளை., சிலோன். 38. உமாபதி, L. P., கிருஷ்ணகிரி. 38. உஷா, வைதேகி, S., சென்னை - 4. 40. உதயகுமாரன், S. P., சங்ககிரி. 41. உத்தமன், சண்முகநாதபுரம்.

(மீதி அடுத்த இதழில்)

# சரியான தீர்ப்பு

## கே. சுந்தரேசன்

பூபதி அந்தக் கிராமத்துக்கே ஓர் அறிவுக் களஞ்சியமாக விளங்கி வந்தார். கிராமத்து ஜனங்கள் தங்களுடைய கஷ்ட நஷ்டங்களையெல்லாம் அவரிடம் தான் வந்து கூறுவார்கள். அவர்களுக்குள் ஏதாவது சண்டை சச்சரவுகள் ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைப்பார் பூபதி. உபகாரி பூபதிக்குச் சமயோசித புத்தி அதிகம்.

ஒரு நாள் பூபதி மாலையில் வெற்றிலைப்பெட்டி சகிதம் திண்ணையில் வந்து அமர்ந்தார். அப்பொழுது நாட்டாண்மைக்கார நடேசனும் மற்றும் மாணிக்கஞ்செட்டி, தருமலிங்கம் செட்டி என்னும் இரு வியாபாரிகளும் வெகு அடக்கமாக அவர் முன்னிலையில் வந்து நின்றார்கள். பூபதி கையிலுள்ள வெற்றிலையில் சுண்ணும்பு தடவியவாறே அதிகாரத் தொனியில் நடேசனை நோக்கி, "இவர்கள் யார்?" என்று கேட்டார். உடனே நடேசன், "எஜமான்! இதோ நிற்கும் இவ்விருவருக்கும் இன்று ஏதோ சச்சரவு. ஒருவருக்கொருவர் கைகலப்பாகும் போல் இருந்தது. உடனே இருவரையும் தங்களிடம் அழைத்துவந்துவிட்டேன். தீர்த்து அனுப்புங்கள்!" என்று சொல்லிவிட்டுப் போனுன்.

"ஊம்! நீதான் மாணிக்கஞ் செட்டியா?" என்ருர் பூபதி.

"ஆம்! தங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு இந்தத் தருமலிங்கம் செட்டி, என்னிடமிருந்து இருநூறு ரூபாய் கடன் வாங்கிக்கொண்டான். ஒரே வாரத்தில் திருப்பிக் கொடுப்பதாய்க் கூறினுன். அவன் கஷ்டத்தைக் கண்டு மனம் இரங்கி, ரூபாய் இருநூறு கொடுத்து உதவினேன். அவ்வளவுதான். இரண்டு மாதமாகியும் என் வீட்டை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. நடுவில் நான் பலமுறை அவன் வீட்டிற்குச் சென்று கேட்டேன். சில நாட்கள், 'அவர் வீட்டில் இல்லை' என்ற பதிலும், சில நாட்கள், 'பின்பு தருகிறேன்' என்ற பதிலும் தான் கிடைத்தன. இரண்டு நாட்களுக்கு முன்பு போய்க் கேட்டபோது, 'பணமா? ஏது? யார் வாங்கினுர்கள்? நீ யார்? ஊர் பேர் தெரியாதவன் எல்லாம் பணம் கேட்க வந்து விடுகிருர்கள்!' என்று என்னை இகழ்ந்து கூறி, அடித்துத் துரத்தவும் முற்பட்டார். நீங்கள்தான் என் பணத்தை வசூலித்துக் கொடுக்க வேண்டும்" என்ருன் மாணிக்கம்.

பூபதி, உடனே தருமலிங்கத்தை அழைத்து விசாரித்தார்.

"அவன் யாரோ! அவனை இதற்கு முன்பு நான் பார்த்தது கூடக் கிடையாது. பணம் கொடுத்ததாகப் பொய் சொல்லுகிருன். இவனைப் போல் பல திருட்டுப்பயல்கள் பலர் ஊரில் கிளம்பியிருக்கின்றனர். இவர்களை

முதலில் ஒழித்துக் கட்ட வேண்டும்'' என்றான் தருமலிங்கம்.

இவர்களில் யார் கூறுவது உண்மை என்பதே புரியாத புதிராக இருந்தது பூபதிக்கு. இருவரையும் பார்த்துப் பல கேள்விகள் கேட்டார் அவர்.

''மாணிக்கம்! நீ தருமலிங்கம் செட்டியாரிடம் பணம் கொடுக்கும்போது அருகில் யாராவது இருந்தார்களா?''

''ஒருவரும் இல்லீங்க. நாங்கள் இருவரும் என் வீட்டுக் கூடத்தில் ஓர் அறையில் அமர்ந்திருந்தோம். அங்கேதான் தருமலிங்கம் என்னைப் பணம் கேட்டார். நானும் கொடுத்தேன்.''

''பணம் வாங்கிக் கொண்டதற்குச் சாட்சிகள் உண்டா? வெறும் நம்பிக்கையின் பேரில் எப்படிக் கடன் கொடுக்கலாம் என்று கேளுங்கள்'' என்று கேட்டான் தருமலிங்கம்.

''பணம் கொடுத்த அன்று 'கடன் பத்திரம் ஒன்று எழுதி ஸ்டாம்பு ஒட்டி வாங்கிக் கொண்டேன். ஆனால் அதைக் களவாடியவரும் இவரே. ஒரு நாள் இவன் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தான். என் வீட்டு அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது தருமலிங்கம் என்னைக் குடிக்கத் தண்ணீர் கேட்டார். நான் தண்ணீர் எடுக்க உள்ளே சென்றேன். பிறகு தண்ணீருடன் திரும்பி வந்தேன். தருமலிங்கம் தண்ணீர் குடித்துவிட்டு விறுவிறு என்று எழுந்து, நாக்குழற, 'போய் வருகிறேன்' என்று கூறி விட்டு உடனே வெளியேறி விட்டார். அவர் போகும்போது இருந்த பதற்றத்தைக் கண்டு நான் சந்தேகத்துடன் ஏதோ நடந்திருக்கிறதென்று அறையினுள் சென்று பார்த்தேன். அங்கு நான் டிராயரில் வைத்திருந்த என் கணக்குப் புத்தகம் மேஜைக்குக் கீழே கிடந்தது. அதற்குள் இருந்த கடன் பத்திரத்தைக் காணவில்லை. இருந்தும் வேறு எங்கேயாவது வைத்து விட்டோமோ என்று வீடெல்லாம் பலமுறை தேடிப் பார்த்தேன். அகப்படவில்லை. இவர்தான் அதை எடுத்திருக்க வேண்டும் என்பது ஊர்ஜிதமாகி விட்டது. உடனே அவர் வீட்டுக்குச் சென்று கேட்டேன். 'பணமா? நீ யார்? மரியாதையாகப் போய்விடு' என்று விரட்டினார். பிறகு அங்கிருந்தால் நிலைமை மோசமாகி விடுமென்று இங்கு வந்து விட்டேன்'' என்றான் மாணிக்கம்.

''தருமலிங்கம், இவன் சொல்வது உண்மைதானா?''

''இல்லீங்க, எல்லாம் உண்மை கலப்பில்லாத பொய். சத்தியமாக நான் இவனைப் பார்த்ததுமில்லை. இவன் வீட்டிற்குப் போனதுமில்லை'' என்று சாதித்தான் தருமலிங்கம்.

''நல்லது. நீ பணத்தை எந்த அறையில் வைத்துக்கொண்டு கொடுத்தாய்? எங்கே கடன் பத்திரம் வைத்திருந்தாய்?'' என்று மாணிக்கத்தைப் பார்த்து கேட்டார் பூபதி. ''என் அறையில் தான் கொடுத்தேன்.''

''அங்கு என்ன என்ன பொருள்கள் இருக்கின்றன; சொல்.''

''ஒரு மேஜை, ஒரு நாற்காலி, சில புஸ்தகங்கள், பேனா முதலியவைகள் இருக்கின்றன.''



"சரி, உன் வாக்கு மூலம் முடிந்து விட்டது, நீ போய் உன் அறையிலிருந்து உன் பேனுவையும் கணக்குப் புத்தகத்தையும் எடுத்து வா" என்று மாணிக்கத்தை அழைத்து அவன் காதில் ஏதோ சொல்லி அனுப்பிவிட்டார் பூபதி.

மணி பன்னிரெண்டு, ஒன்று, இரண்டு என்று ஓடிக்கொண்டே இருந்தது. போன மாணிக்கம் திரும்பிவரவேயில்லை. தருமலிங் கத்துக்கு ஆத்திரமாக வந்தது. ஏதேதோ முணகிக்கொண்டே இருந்தான்.

பூபதி அவனிடம், "மாணிக்கம் வீடு போய்ச் சேர்ந்திருப்பானு? போயிருக்க மாட்டானு? இன்னும் என் வரவில்லை?" என்று கேட்டார்.

உடனே தருமலிங்கம் அவசர மாக, "திருட்டுப்பயல்! எப்பொழுதோ வீடு போய்ச் சேர்ந்திருப்பான். இங்கிருக்கும் வீட்டிற்குப் போய்வர இவனுக்கு நான்கு மணி நேரமா? சே, சே!" என்று அங்கலாய்த்துக்கொண்டான். அப்பொழுது யாரோ ஓர் ஆள் வந்து, "மாணிக்கத்தின் குழந்தை இறந்து விட்டது. ஆதலால் அவர் இப்பொழுது வர முடியாது என்று சொல்லச் சொன்னுர்" என்ருன். இதைக் கேட்ட தருமலிங்கம், "எல்லாம் பொய். அவனுடைய ஒரே மகன்தான் எப்பொழுதோ இறந்து விட்டானே, வேறு குழந்தைகள் அவனுக்கு ஏது? பார்த்தீர்களா, அயோக்கியத்தனத்தை!" என்ருன் தருமலிங்கம்.

"வரட்டும், மாணிக்கம்! இன்று முழுதும் அவன் வராவிட்டால் அவன் சொல்வது அனைத்தும் பொய்தான்" என்று புன்னகையுடன் கூறினர். தருமலிங்கத்துக்கு அவர் சொல்லும் பொழுதே மகிழ்ச்சி பொங்கியது. சற்று நேரமானவுடன் சொல்லி வைத்தாற்போல் மாணிக்கம் வந்தான்.

அவனைக் கண்டதும் பூபதி, "மாணிக்கம்! நீ சொன்ன சொற்கள் அனைத்தும் பொய் என்று தருமலிங்கம் சொன்னனே! அவை எல்லாம் அவன் ஜோடித்த பொய்கள். நீயே உண்மையானவன். நியாயமாகத் தருமலிங்கம் உனக்கு இருநூறு ரூபாயும் அதற்கு வட்டியும் கொடுத்துதான் ஆகவேண்டும்" என்று கூறினர். இவ்வளவு நேரம் சந்தோஷமாக இருந்த தருமலிங்கத்தின் முகத்தில் அசடு வழிந்தது.

"நானு குற்றவாளி? இல்லை. ஒருகாலுமில்லை. நான் பணம் கொடுக்க மாட்டேன், எதற்காகக் கொடுப்பது?" என்று பதற்றத்துடன் அலறினன் தருமலிங்கம். பூபதி புன்முறுவலுடன், "நீ குற்றவாளி என்பதை உன் அவசரப் புத்தியால் நீயே விளக்கமாக அறிவித்து விட்டாய். இதோ பார், தருமலிங்கம்! எதற்காக விஷயத்தை மறைத்து மறைத்துப் பேசுகிருய்? உண்மையைச் சொல்லிவிடு" என்ருர்.

"இல்லை....இல்லை....ஒருகாலுமில்லை. நான்தான் குற்றவாளி என்று எப்படிக் கூறலாம்?" என்ருன் தருமலிங்கம்.

"சொல்கிறேன், கேள்! முதலில் நான் மாணிக்கத்தை உனக்குத் தெரியுமா, அவன் வீட்டிற்கு நீ போனுயா என்று கேட்டதற்கு அவன் யாரென்றே எனக்குத் தெரியாது; அவன் வீடும் எனக்குத் தெரியாது; அவன் கூறுவதெல்லாம் வெறும் பொய், பித்தலாட்டம் என்று கூறினய். பின்பு, மாணிக்கம் வீடு சென்றதும், 'இங்கிருக்கும் வீட்டிற்குப் போய் வர எவ்வளவு நேரம்?' என்று முணுமுணுத்தாய். அதை நான் கேட்காமல் இல்லை. பிறகு மாணிக்கத்தின் குழந்தை இறந்து விட்டது என்று கூறியதும் 'எல்லாம் பொய். அவனுக்கு ஒரே மகன். அவன் எப்பொழுதோ இறந்து போய் விட்டானே' என்று கூறினய். ஆதலால் நீ மாணிக்கத்தை அறியாமல் இவ்வளவையும் கூற முடியாது. அவசரக்குடுக்கை என்பது உனக்கே தகும். ஆதலால் நீயே குற்றவாளி. இன்னும் இரண்டு நாட்களுக்குள் மாணிக்கத்துக்குச் சேரவேண்டிய தொகையை அவனிடம் சேர்ப்பித்து விடவேண்டும். இல்லாவிட்டால் உன் இரண்டு குற்றங்களைப் பற்றிப் போலீஸுக்குத் தெரிவித்து வட்டியும் முதலுமாக வாங்கிக்கொடுப்பேன்" என்று பூபதி கூறினர்.

வேறு வழியின்றி தருமலிங்கம் மாணிக்கத்துக்கு வட்டியுடன் பணம் கொடுக்க ஒப்புக்கொண்டான். மாணிக்கத்தின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. தன்னிடம் நியாயம் இருப்பதை அறிந்து முன் கூட்டியே தன்னை வீட்டிற்கு அனுப்பி தன் குழந்தை இறந்துவிட்டது என்று வேண்டுமென்றே சொல்லும்படி செய்து, நியாயத்தை வரவழைத்த பூபதியின் அறிவை மெச்சினன் மாணிக்கம்.



# அசட்டுப் பிச்சு

ஆர்வி

"டேய், ஊர் வந்துவிட்டதடா! எழுந்திருடா!" என்று குடுமி வைத்தி கூப்பாடு போட்டு எழுப்பியதும் தான் அசட்டுப் பிச்சு கண் விழித்து, "அ..அ..என்ன வந்துட்டுது? யாருக்கு?" என்று உளறியடித்துக்கொண்டு எழுந்தான்.

ரொம்பச் சுவாரஸ்யமான தூக்கத்தில் ரொம்பப் பயங்கரமான சொப்பனம் கண்டுகொண் டிருந்தான் அவன். பாவம், குடுமி வைத்தியினால் சொப்பனம் நடுப் பாதியில் அறுந்துவிட்டது.

"என்னடா! அவங்கள் எல்லாம் எங்கேடா? நீ எப்படிடா வந்தே? பிரிஞ்சால் பயல் செய்ததைப் பாத்தியாடா?" என்று எழுந்து உட்கார்ந்துகொண்டு கேட்டான்.

குடுமி வைத்திக்கு விஷயம் புரிந்துவிட்டது. பையன் சொப்பனம் கண்டுவிட்டு உளறுகிறான் என்பது தெரிந்ததும் அவனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. 'கெக் கெக்கே' என்று விழுந்து விழுந்து சிரித்தான்.

"டேய்! என்னடா சிரிப்பு?" என்றான் அசட்டுப் பிச்சு, தன்னை நிதானப்படுத்திக்கொண்டு. இப்போதுதான் தான் எங்கே இருக்கிறோம் என்று அவனுக்குத் தெளிவாயிற்று.

குமாரி கல்பலதாகூடச் சிரித்தாள்.

கை காட்டி இறங்கவில்லை. எக்ஸ்பிரஸ் கீச்சுக் குரலில் வீல் வீல் என்று குரல் கொடுத்துப் பார்த்தது. அப்படியும் கை இறங்காததால் வேகத்தைக் குறைத்துக் கொண்டு மெதுவாக நின்றது.

"கை இறங்கல்லேடா! ஸ்டேஷன் மாஸ்டர் தூங்கிப் போயிட்டார் போலிருக்குடா!" என்று சத்தம் போட்டான் வைத்தி.

பொழுது நன்றாக விடிந்துவிட்டதால் தூரத்தில் நங்கபுரம் ஸ்டேஷன் தெரிந்தது. அந்த இடத்தில் ரெயில் பாதை ஊரைச் சுற்றிக்கொண்டு வளைந்து செல்கிறது. அசட்டுப் பிச்சு தலையை வெளியே நீட்டி எட்டிப் பார்த்தான். கார்டு வண்டி முதல், புகையைக் கக்கிக்கொண்டிருந்த எஞ்சின் வரையில் நன்றாகத் தெரிந்தது. அவனுக்குத் திடீரென்று வேறொரு யோசனை உதித்தது. ஸ்டேஷனுக்குப் போய் இறங்கி வீடு செல்வதற்கும் அந்த இடத்திலிருந்தே வீடு செல்வதற்கும் அதிக வித்தியாசம் ஒன்றும் இல்லை. பார்க்கப்போனால் அந்த

இடத்திலிருந்து குறுக்கே சென்றால் வீடு வெகு சமீபத்தில்தான் இருந்தது.

வண்டி புறப்படும்வரையில் வாயை மூடிக்கொண்டிருந்த பிச்சு வண்டி நகர்ந்ததும் மெல்ல கதவைத் திறந்தான். இறங்கும் படியில் காலை வைத்துக் கீழே தொப்பென்று குதித்துவிட்டான். குடுமி வைத்தியோ, குமாரி கல்பலதாவோ அவன் கீழே குதித்துவிட்டதைக் கவனிக்கவில்லை. அவர்கள் ஸ்டேஷன் நெருங்கி வருவதைத் தலையை நீட்டிப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டார்கள்.

ஸ்டேஷனில் என்றுமில்லாத கூட்டம் கூடியிருந்தது. இவ்வளவு கூட்டத்துக்கு என்ன விசேஷம் என்று குடுமி வைத்திக்குப் புரியவேயில்லை.

வண்டி பிளாட்பாரத்தில் மெல்ல ஊர்ந்து வந்தபோது அத்தனை கும்பலும் இந்த வண்டியைக் கூர்ந்து ஆவலோடு கவனித்தன.

"டேய், அதோ குடுமி வைத்தி இருக்காண்டோய்!" என்று கத்தினான் கீச்சு மூச்சு லோகு.

"ஆமாண்டோய்!" என்றான் மாணிக்கம்.

குடுமி வைத்தி ஒன்றும் புரியாமல் கூட்டத்தைப் பார்த்தான். பிரிஞ்ஜால் ஸ்ரீகாந்த், மணி முதலியோரும் அங்கே நிற்பது தெரிந்தது. உற்சாகத்தோடு, கையை ...சிக் காட்டினான்.

வண்டி நின்றது.

அத்தனை கூட்டமும் குடுமி வைத்தி இருந்த பெட்டியை நோக்கித் திரண்டு வந்தன. குடுமி வைத்தி தன் பையையும் அசட்டுப் பிச்சுவின் ஹோல்டாலையும் தூக்கிக்கொண்டு, "ஏய் பிச்சு! பிச்சு!" என்று கூப்பிட்டான். பிச்சு வண்டியில் இருந்தால்தானே?

இதற்குள் வழியை விலக்கிக்கொண்டு, "எங்கே, எங்கே இருக்



காங்க?" என்று நாலைந்து பேர் வந்தார்கள். குமாரி கல்பலதா பயந்து நடுங்கிக்கொண்டு நின்றாள். அந்த நாலைந்து பேருக்கு நடுவே அவளுடைய தகப்பனார் மீசை துடி துடிக்க நின்றுகொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும்தான் அவள் நடுங்கினாள். இன்ஸ்பெக்டர் குரூப் இவர்கள் இந்த வண்டியில் வருகிறார்கள் என்று அவருக்குத் தந்தி கொடுத்திருந்தார். இந்தச் செய்தி ஊர் முழுவதும் ஒரு நொடியில் பரவிவிட்டது.

மண்டிக்கடை ஐயாசாமி, "பிச்சு, பிச்சு!" என்று கூப்பாடு



போட்டார். குடுமி வைத்தி பதிலுக்கு, "அவனைத்தான் மாமா நானும் பார்க்கிறேன். இங்கே இருந்தவனை ஆளைக் காணோம், மாமா!" என்று சத்தத்துக்கிடையே கத்தினான்.

எல்லாரும் வைத்தியைச் சூழ்ந்துகொண்டு பிச்சு எங்கே இறங்கினான், எங்கே போனான் என்றெல்லாம் கேள்வி கேட்டுத் துளைத்துவிட்டார்கள். வைத்தி பதில் சொல்ல முடியாமல் திணறினான். பிச்சு மறைந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்ட மண்டிக்கடை ஐயாசாமி, "பிச்சு, பிச்சு! எங்கேடா போயிட்டே? எல்லாரும் வந்திருக்கிறார்களே, நீ மட்டும் எங்கேடா போயிட்டே! கருப்பூர் ஐயனாரே! என் பையனுக்கு என்ன வந்துட்டுதோ, தெரியல்லியே!" என்று கூப்பாடு போட்டு ஸ்டேஷனை ரகளை பண்ணி விட்டார்.

"வண்டி நின்றபோது இறங்கியிருப்பான், ஐயா! அவனுக்கு ஒன்றும் ஏற்பட்டிருக்காது. பேசாமல் வீட்டுக்குப் போய்ப் பாரும், ஐயா!" என்று எல்லாம் அவரைத் தேற்றினார்கள்.

"உங்களுக்கெல்லாம் என்ன ஐயா, கவலை? என் பிள்ளை அருமை எனக்குத் தெரியும். உங்க பிள்ளைகள் எல்லாரும் சௌக்கியமாய் இருக்கிறார்கள். என் பிள்ளையைக் கருப்பூர் ஐயனார்தான் காப்பாத்தணும்!" என்று யார் சொல்வதையும் கேளாமல் தத்துப்பித்தென்று ஐயாசாமி தொண்டை வறளக் கத்தினார்.

அவரைச் சமாதானப்படுத்தி வீட்டுக்கு அனுப்ப சார்ஜண்ட்

டவுட் வரும்படியாக ஆயிற்று.

"போ மேன், வூட்டுக்கு! போய், பையன் வந்திருக்கிறான், இல்லே, பார் மேன்! இல்லாப்போனா நம் கிட்டே வந்து ஒரு ரிப்போர்ட் கொடு, மேன்!" என்று சார்ஜண்ட் டவுட் வந்து அவரை வண்டி ஏற்றி அனுப்பினார்.

குமாரி கல்பலதாவைப் பார்க்கத்தான் ஸ்டேஷனில் ஏகப்பட்ட கூட்டம் கூடியிருந்தது. என்று அவள் அப்பா எண்ணினார். ஆனால் பிச்சுவைப் பார்க்கத்தான் கூட்டம் என்று ஒரே சாதனையாகச் சாதித்தார் மண்டிக்கடை ஐயாசாமி.

"மாமா மாமா! நானும் வண்டியிலே ஏறிண்டு வறேன், மாமா!" என்று வண்டியோடு ஓடி வந்தான் வைத்தி.

"போடா போ!" என்று கோபத்தோடு அசட்டுப் பிச்சுவின் படுக்கையைப் பிடித்துக்கொண்டு சொல்லிவிட்டார் ஐயாசாமி. அவர் முகத்தில் எள்ளும் கொள்ளுமாக வெடித்தன. வைத்தி ஓட முடியாமல் நின்று மெதுவாகத் தன் வீட்டை நோக்கி நடந்தான்.

* * *

"டேய், எல்லாம் 'ப்ளுக்' குடா! இந்தப் பயல் ஒண்ணுமே கண்டு பிடிக்கலேடா. 'காக்காய் உட்காரப் பனம்பழம் விழுந்தது' என்கிற கதைதாண்டா!" என்று பிரிஞ்ஜால் ஸ்ரீகாந்த் அடித்துப் பேசிக்கொண்டிருந்தான்.

கீச்சு மூச்சு லோகு கீச்சுக் குரலில், "என்னடா அப்படிச் சொல்றே? பேப்பரிலே எல்லாம் நியூஸ் கூட வந்துதேடா!" என்றான்.

"எல்லாம் கப்ஸாடா! பிச்சு வேணுமானா வரட்டும்; நானே அவனைக் கேட்கிறேன், பாருங்கடா! இந்தத் தடவை மட்டும் நான் ஏமாற மாட்டேண்டா!" என்றான் பிரிஞ்ஜால்.

அதே சமயத்தில் மண்டிக்கடை ஐயாசாமிக்கும் அவருடைய தர்ம பத்தினி பார்வதம்மாளுக்கும் குருக்ஷேத்திரத்தில் சண்டை ரகளைப் பட்டுக் கொண்டிருந்தது. பிச்சுவின் அப்பா தம் பங்களாவுக்குக் 'குருக்ஷேத்திரம்' என்றுதான் வெகு பொருத்தமாகப் பெயரிட்டிருந்தார்.

"இங்கேதாண்டி வந்திருப்பான். வராமெ எங்கேடி போயிருப்பான்?" என்றார் ஐயாசாமி.

"வரல்லியே, வரல்லியே, வரல்லியே! உங்க மூஞ்சியிலே முழிக்காமே நானும் அவன் மாதிரி என்னிக்குத் தொலையப் போறேனோ, தெரியல்லியே!" என்றாள் பார்வதம்மாள்.

அந்தச் சண்டையை அதற்கு மேல் அங்கிருந்து கேட்டுக் கொண்டிருப்பது சரியல்ல. ஆகையால் நேரே குமாரி கல்பலதாவின் வீட்டில் என்ன நடக்கிறது என்பதையாவது கவனிப்பதே நல்லது.

குமாரி கல்பலதாவும் அவளுடைய மீசைக்கார அப்பாவும் வீட்டுக்குள் நுழைந்தபோது, யாரோ சோபாவிலிருந்து எழுந்திருப்பதுபோல் இருந்தது. மீசைக்காரருக்குக் கொஞ்சம் சாளேச்வரம். அதாவது வெள்ளெழுத்து. பக்கத்தில் இருப்பதெல்லாம் ஒரே புகைபோல நிழலாகத்தான் தெரியும்.



"யாரு, யாரு, யாரையா அது?" என்று மீசை துடிதுடிக்கக் கேட்டார் அவர். மறுபடியும் ஏதாவது வம்பு தம்பு செய்ய எவனாவது வந்துவிட்டானே என்று அவருக்குக் கிலி.

"நான்தான் ஸார். ஏ. பிச்சு! பயப்படாதீங்க!" என்றான் பிச்சு.

"ஆமாம் அப்பா!" என்றாள் கல்பலதா. "இந்தப் பையன்தான் என்னைக் காப்பாதிச்சு! இதுக்கு ஒரு டின்னர் கொடுக்கணும், அப்பா!" என்றாள் அவள்.

"அதுக்கென்ன, வச்சுப்புடுவோம். ஆமாம், தம்பியை அவங்க அப்பா ஸ்டேஷனில் தேடிக்கிட்டுச் சத்தம் போட்டுக்கிட்டிருந்தாரே! இங்கே இருக்கியே தம்பீ! வீட்டுக்குச் சொல்லியனுப்பட்டுமா?" என்றார் அவர்.

"ஐயையோ! இப்போ எங்க அப்பா கண்ணிலே பட்டேனே தொலைஞ்சேன்! அதுக்குப் பயந்து கொண்டுதானே இங்கே வந்திருக்கேன்!" என்றான் அசட்டுப் பிச்சு.

(தொடரும்)



# எங்கள் பகுதி

### * பெரிய சாதனை

15-2-54 இதழ் கண்களுக்கோர் அரிய விருந்து. அட்டைப் படம் குழந்தைகளின் சேஷ்டைகளில் ஒன்றைக் கண் முன் நிறுத்துகிறது. "சந்திரகிரிக் கோட்டை" நல்ல விறு விறுப்போடு மேலே என்ன ஆகிறது என்ற ஆவலைத் தோற்றுவிக்கிறது. இந்துமதியை எனக்குப் பிடிக்கவில்லை; ஏனெனில் அவள் சகோதரர்களிடையே ஓர் பிளவாக இருக்கிறாள். "பிரிந்த நண்பர்கள்" அடிக்கடி பல பத்திரிகைகளில் பர்பல விதமாய்க் காட்சியளித்துவிட்டது. "கோழியும் வைரமும்" ரவீந்திரரின் "புதையல்" என்ற கதையை நினைவூட்டுகிறது. "வைரம்" என்ன விலையுடையதாயினும் ஒரு வேளை உணவாக உபயோகமாகாது என்ற அவர் கருத்து நன்கு அழகாக அமைக்கப்பட்டுள்ளது. "இரட்டைப்பேனா" ஒரு புதுமை. தொடர்ந்து கதா பாத்திரங்களை நம்முடன் நேரிடையாக மோதவிடுவது நன்கு சோபிதமாக இருக்கிறது. புது மெருகுடன் பழமை, "ஏகலைவ"னாக மின்னுகிறது. கிரிக்கெட்டுடன் ஈருயிர் ஒருடலாய்ப் பழகுவோருக்கு, "அம்பயர் படம்பாடு" ஆனந்தமளிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் விறுவிறுப்பு இல்லை; சுவை இல்லை.

"மறைந்த வைரங்கள்" நம்ப இடமளியாத ஒரு கற்பனை.

"பாலகுமாருக்கு"ப் படமே போதிய கதையாக இருக்கிறது; எழுத்தில் விளக்கமே தேவையில்லை எனத் தோன்றுமாறு "ஸாமி"யின் சித்திரங்கள் பரிமளிக்கின்றன. சோகம், பயம், படபடப்பு, கொடுமை இவை முறையே தக்கவாறு தக்க இடத்தில் தக்க பாத்திரங்களில் (படம் அளவில் மிகச் சிறியதே எனினும்) நன்கு பிரதிபலிக்கின்றன. குண்டர்கள் கிங்காங்குக்கு ஏதேனும் உறவோ?

"அசட்டுப் பிச்சு" அமைதியுடன் நமக்களிக்கும் 'அட்வென்சர்ஸ்' அற்புதமாகவும் அழகாகவும், ஆச்சரியமளிப்பவையாயும் இருக்கின்றன. நமக்கே பிச்சு ஒரு புதிராகத்தான் இருக்கிறான்.

பெரிய சாதனைகள் பல புரிந்த பெரியோர்களின் வாழ்க்கையில் நடந்த ருசிகரமான சம்பவங்களை எடுத்து வெளியிட்டால் படிப்ப

---

* இந்த இரண்டு கடிதங்களுக்கும் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

தற்குச் சுவையாயும், அறிவிற்கு விருந்தாகவும் அமையும் என்பது எனது கருத்து. சிறிய பாடல்களும் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சிறிய அளவில் பெரிய சாதனையைக் குழந்தை உலகிற்குக் 'கண்ணன்' செய்கிறான் என்றால் அது மிகையாகாது.

வி. ர. கிருஷ்ணன், வடக்குத் தியாகராயநகர்.

## * எங்கள் கண்ணன்

15-2-54 கண்ணன் இதழின் படம் நன்றாக இருக்கிறது. அவனுடைய செய்கையைப் பார்த்தாலே குறும்புக்காரப் பையன் என்று தெரியவில்லையா?

கடுகு சிறிதாயினும் காரம் பெரிது என்பது போல், 'கேட்டீர்களா!' என்ற பகுதியினால் நாங்கள் பல விஷயங்களை அறிகிறோம்.

என். சோமசுந்தரம் எழுதிய பிரிந்த நண்பர்கள் என்ற கதை நன்றாகவே இருக்கிறது. விளையாட்டு வினையாய் முடிந்துவிட்டது போலிருக்கிறது, இக் கதையின் முடிவு. ஆனால் என்னவோ நம்முடைய மனசு, 'இந்தக் கதை இவருடைய சொந்தக் கதையாக இருந்திருக்கக் கூடாதா?' என்று முணுமுணுக்கிறது.

கோழியும்வைரமும்என்ற கதை எனக்கென்னவோ பிடிக்கவில்லை.

தங்கமணி எழுதிய எதிர் வீட்டு ஏகலைவன் படுஜோரான கதை. இளம் எழுத்தாளர்கள் இப்படிக் கடுமையான மனதுடையவர்களாக இருப்பது சரியில்லைதான். இரட்டைப் பேனா என்ற கதை சுமாராய் இருக்கிறது.

'அம்பயர் படும் பாடு' சுவாரஸ்யமான கதை. ஆட்டம் ஆடும்போது கஷ்டப்பட்டாலும் முடிவில் அம்பயருக்கு ஒரு 'ஹிப்-ஹிப்-ஹுரே' கிடைக்கிறதே! கருடாழ்வார்-அநுமான்கிளப்புகளுக்கு இடையே நடக்கும் அடுத்த மாட்சுக்கு என்னை அம்பயராக்கும்படி சிபாரிசு செய்யுங்கள்.

மறைந்த வைரங்கள் என்ற தப்பறியும் கதை மிகவும் சுமாராய் இருக்கிறது.

மூன்று தொடர் கதைகளான சந்திரகிரிக் கோட்டை, பாலகுமார் (சித்திரக் கதை), அசட்டுப் பிச்சு இம்மூன்றிலும் சுவாரஸ்யம் மிக்கக் கட்டங்கள் வந்துள்ளன. இரட்டையர்களில் யாருக்கு வெற்றியோ? "எங்கள் பகுதி": ஆகா! ரொம்ப ஜோராய் இருக்கிறது. ஒவ்வொரு தம்பி, தங்கைகளும் தங்கள் அபிப்பிராயங்களை நன்றாகவே எழுதியிருக்கிறார்கள்.

வி. ஆர். கமலாதேவி, கருகம்பனை, காங்கேசன்துறை.

## ஆள்ராகாதீர்கள் :

15-2-54 கண்ணன் இதழ் அருமையா யிருந்தது. அசட்டுப் பிச்சு அபாரம். இந்த இதழில் வெளியான 'பிரிந்த நண்பர்கள்' என்ற கதையை ஏற்கனவே ஒருவர் வேறொரு தலைப்பில் எழுதியுள்ளார். தலைப்பைத் தவிர மீதியுள்ள பெயர், வார்த்தை ஒன்றும் மாறாமல் அப்படியே காப்பியடித்து 'சோமசுந்தரம்' எழுதியுள்ளார். சொந்த அறிவு வளரவே கதைகள் எழுதவேண்டும். காப்பியடிப்பதால் அறிவு வளர்ச்சி ஏற்படாது. கண்ணைக் கவரும் படங்களுடன் வரும் கண்ணனில், கற்பனையாளர்காள், காப்பியடித்துக் கதைகள் எழுதி அநேக ஆயிரக் கணக்கான அன்பர்களின் அவமதிப்புக்கும் கோபத்திற்கும்

ஆளாகி வருந்தாதீர்கள். கல்வியைப் புகட்டும் கண்ணன் வாழ்க.

R.S. ராஜாராம், கோயம்புத்தூர்.

## ஒரு குறை!

15-2-54 கண்ணன் இதழ் உண்மையிலேயே உள்ளத்தைக் கவர்கிறது.

'கேட்டீர்களா' பகுதியில் வெளிவந்துள்ள 'மனிதனின் மதிப்பு, பத்து ரூபாய்' போன்ற விஞ்ஞானச் செய்திகள் இனிமேல் கண்ணனில் நிறைய இடம் பெறவேண்டும்.

இதழின் உயிர்போன்ற 'சந்திரகிரிக்கோட்டை' பசுமையான படங்களுடன் வெளிவந்திருக்கிறது. நாடும் நங்கையும் எப்போர்ப்பட்ட ரத்த பாசத்தையும் அழித்துவிடக் கூடியவை என்னும் உண்மையை வெளிப்படுத்துகிறது இவ்வைந்தாம் பாகம். கதையின் நடையிலும் ஒரு தனிக் கவர்ச்சி அமைந்துள்ளது.

'பிரிந்த நண்பர்கள்' காப்பியடித்த கதை. அது கண்ணனில் இடம் பெற்று விட்டதுதான் இதழின் ஒரே குறை.

'கோழியும் வைரமும்' ஓர் அரிய நீதிக்கதை.

'இரட்டைப் பேனு' மிகவும் சுவாரசியமாக இருக்கிறது.

தங்கமணியே முன்பொருமுறை ஓர் 'எதிர் வீட்டு ஏகலைவ'னிடம் ஏமாந்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது கதையை வாசிக்குமிடத்து. அவ்வளவு தத்ரூபமாக எழுதிருக்கிறார்.

'அம்பயர் படும்பாடு', 'மறைந்த வைரங்கள்' என்ற கதைகளும் நன்றாகவே இருக்கின்றன. பிச்சு அசட்டுத்தனமாகவே இருப்பது போல் இன்னொரு கேஸைக் கண்டுபிடிப்பதாகச் செய்திருப்பது அழகாக இருக்கிறது. 'மாஸ்டர் பாலகுமாரு'ம் அப்படியே.

விகடத்துணுக்குகளில் 20-ஆம் பக்கத்திலும் 22-ஆம் பக்கக்கடைசியிலும் வெளிவந்துள்ள துணுக்குகள் ரொம்பவும் ஜோர்!

இதழின் முக்கியமான குறை 'பிரிந்த நண்பர்கள்' என்ற கதையே. மொத்தத்தில் இவ்விதழ் பொன்னான இதழ்!

து. பென்னி, பசுமலை, மதுரை.

## தித்திக்கும் இதழ்

அண்ணா. நமஸ்காரம். 15-2-54 இதழில் வெளிவந்த என். சோமசுந்தரம் எழுதிய 'பிரிந்த நண்பர்கள்' என்ற கதை நன்றாக இருக்கிறது; ஆனால் அப்பட்டமான காப்பி. இரட்டைப்பேனா என்ற கதை உண்மையை எத்தனை நாளானாலும் மறைக்க முடியாது என்பதை எடுத்துக் காட்டுகிறது. எதிர்வீட்டு ஏகலைவன் என்ற கதை நன்றாய்த்தான் இருக்கிறது. மறைந்த வைரங்கள் என்ற கதை என்ன தந்திரம் பண்ணினாலும் மூளை உள்ளவர்களிடம் தப்பிக்க முடியாது என்று உணர்த்துகிறது.

பாலகுமார் அடுத்த இதழ் எப்பொழுது வரும் என்று ஏங்கும்படி உருவாகியிருக்கிறது. அசட்டுப் பிச்சு மிகவும் பிரமாதமாய் இருக்கிறது. இனிமேலாவது கதைகளைக் காப்பி அடிக்காமல் தன் சொந்த மூளையில் உதித்த கற்பனையை எழுதும்படி நண்பர் என். சோமசுந்தரத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர் காப்பியடித்த கதையின் அசலை இதனுடன் அனுப்பியிருக்கிறேன்.

M. முகம்மது மீராசா, திருச்சி.

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கிளைக் கழகம்

திருச்சி - 3 (காவேரி அம்மன் கோட்டை வாசல்)
- உபதலைவர்: B. ரங்கராஜன்
- செயலாளர்: K. ஜானகிராமன்
- பொருளாளர்: V. N. கணேசன்

12 பேர் கொண்ட ஒரு செயற்குழு அமைந்திருக்கிறது. ஒரு கையெழுத்துப் பத்திரிகை ஆரம்பிக்க அங்கத்தினர்கள் முடிவு செய்திருக்கிருர்கள்.

புலியூர் கணேசபுரம்
- உபதலைவர்: P. P. செல்வன்
- செயலாளர்: P. K. வெங்கடாசலம்
- துணை: P. K. நடேசன்
- பொருளாளர்: P. S. சின்னத்தம்பி

ஐந்து பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. வாசகசாலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும் அங்கத்தினர்களாகச் சேர விரும்புபவர்கள் செயலாளர், கணேசபுரம், புலியூர் P. O என்ற விலாசத்துக்கு வரலாம்.

சேலம் டவுன் (டாக்டர் ராமநாதன் ரோடு)
- உபதலைவர்: R. விஜயன்
- செயலாளர்: N. ஜானகிராமன்
- பொருளாளர்: N. சௌந்தரராஜன்
- வா. நிர்வாகி: R. சம்பத்குமாரன்

பதினைந்து பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. கதிரவன் என்ற கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

கணியூர்
- உபதலைவர்: சேதுராமன்
- செயலாளர்: வேங்கடராமன்
- பொருளாளர்: கணபதி
- துணைப் பொருளாளர்: நடராஜன்
- வா. நிர்வாகி: பிச்சுமணி

சென்னை-600 008

ஆறு பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

துறையூரில் கண்ணன் கிளைக் கழம் நிறுவ M. முருகேசன், 3/46, பெரிய கடை வீதியில் அங்கத்தினர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

நாமக்கல்லில் கண்ணன் கிளைக் கழகம் நிறுவ என். பி. ராமசாமி 52, கொல்லம் பட்டினம் தெரு, நாமக்கல் என்ற முகவரிக்கு எழுதலாம்.

திருமங்கலம், (லால்குடி) கிளைக் கழகத்தின் முதல் ஆண்டுக் கூட்டம் 28-2-54 அன்று ஸ்ரீமதி கிருபாகரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உபதலைவி குமாரி கௌரியும் எம். பாகிரதியும் பங்கு எடுத்துக்கொண்டார்கள்.

## பேனு நண்பர்கள்

1. மு. சு. அபுல் ஹையிர், 14, குருநாகல் வீதி, சிலாபம், (இலங்கை)
2. என் பி. ராமசாமி, 52, கொல்லம்பட்டினம் தெரு, நமக்கல், (சேலம் ஜில்லா.)
3. K. ரகுநாத், S/O Dr. K. P. கெரிகர், செர்ரி ரோடு, சேலம்.

Reg. No. M. 5542

## புதிய கண்ணன் வெளியீடுகள்

## வால் அறுந்த குரங்கு

வால் அறுந்த குரங்கு, இதோ இந்தப் பிள்ளை, ஈயின் கதை முதலிய ஐந்து பாட்டுக் கதைகள் அடங்கிய சிறுவர் புத்தகம். பாட்டைப் பாடிக்கொண்டே எழுத்துக்களைக் குழந்தைகள் கற்றுக்கொண்டு விடுவார்கள். வர்ணப்படங்கள் நிறைந்தது.

**விலை 8 அணா**

## சமர்த்து மைனா

தி. ஜ. ர. எழுதியது

இந்தப் புத்தகத்தில் எட்டுக் கதைகள் இருக்கின்றன. கதைகள் என்றால் கட்டுக் கதைகள் அல்ல. எல்லாம் உண்மைக் கதைகள்; விலங்குகள், பறவைகள் இவற்றின் குணங்களையும் பழக்க வழக்கங்களையும் உள்ளபடி சித்திரிக்கும் கதைகள். சுவையுள்ள கதைகள். அழகிய படங்கள் நிறைந்தது.

**விலை 8 அணா**

## விஞ்ஞானம் பேசுகிறார்

ஆசிரியர்கள்:

பெ. நா. அப்புஸ்வாமி, ஜே. பி. மாணிக்கம்

நாம் தினசரி பல பொருள்களை உபயோகப் படுத்துகிறோம். அவை எப்படி வேலை செய்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா? மொத்தம் 12 பொருள்களைப்பற்றி இதில் சித்திரங்களாக விவரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தினம் அரைமணி செலவிட்டால் 12 நாட்களில் தெரிந்து கொண்டுவிடலாம்.

**விலை 8 அணா**

## பார்வதியும் ஏழு சித்திரக் குள்ளர்களும்

கதை பழங்காலத்துக் கதைதான். என்றாலும் படிக்கப் படிக்க, கதையின் போக்கு உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும். அத்தனை சுவாரஸ்யமான கதை.

**விலை 3 அணா**

கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.

**கண்ணன் காரியாலயம்**

**மயிலாப்பூர் :: :: சென்னை—4.**